உ

சிவமயம்.

# ஆத்மஞான சத்தாவஸ்தை அனுபவமும், ஆத்மஞான சம்பந்தரும்,

2-பாகமும் ஒன்றுசேர்ந்தது.

---

இஃது,

ஸ்ரீ கோயிலூர் ஆதீனம், சிக்கல் புரவாச்சேரி மடம்

**ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள்**

அவர்களின்,

---

பிரதம சிஷியர்,


**வைத்திலிங்க சுவாமிகளால்**

இயற்றப்பட்டு.

---

கும்பகோணம் தயாநிதி பிரஸில், அச்சியற்றப்பட்டது.

இதன் விலை] 1935. [0—5—0.



வைத்திலிங்க சுவாமி

உ

சிவமயம்.

# ஆத்மஞான சத்தா வஸ்தை அநுபவம்.

இஃது

ஸ்ரீ கோயிலூர் ஆதீனம், சிக்கல்

புரவாச்சேரி படம்

ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள்

அவர்களின்

பிரதம சிஷியர்.

வைத்திலிங்க சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம் "தயாநிதி" பிரஸில்

அச்சியியற்றப் பெற்றது.

இதன் விலை] 1935 [0—5—0

# நூலின் பிரயோசனம் ௧

இந்நூலின் பிரயோசனம், விளங்க வேண்டுமானால் இதற்கு முன், "அனுபவ ஆத்ம ஞான விளக்க" நூலைப் படித்து, பிறகு சென்றால். இதனுண்மை விளங்கும்.

இந்நூல் யோகமானது பிராணனோடு மனம் வேறு வேறாக, விஷய கோரணியைக் காட்ட சீவன் அநுசூசனைப் களிப்பதும் வேதாந்தம் சித்தாந்தம் கருமம் பக்தி உசிதமல்ல போலியோகமே, உசிதம் என்ற வக்கரத்தையும், வேதாந்த நிலையில், உபசாந்தமில்லாத வேதாந்த போலியே உசிதமென்ற உணற்சியையும் சித்தாந்தம் சித்தமற்ற நிலையில் நிலையில்லாமல் போலிபத்தியாகிய, பாஹ்ய விக்கிரக பூசா விக்கிரமத்திலிருக்கிறதே உசிதம் என்ற பிடிப்புகளையும், நித்திய (பிரதிதினமும்) கருமானுட்டான, செபமே உசிதமென்ற, போலி மனப் பிடிப்புள்ள, உணற்சி உள்ளதையும் மேல்சொன்ன இவர்கள் இந்நூலில் தங்களுக்கு ப்ரீதி உண்டாகி பார்த்தால், மனப்பிடிப்பற்ற உண்மை நிச்சயம் விளங்கு மென்பது யெனது துணிபு.

பாகியத்தில்''

அந்தரகிமிர்ந்தும் அடகு சேருந்தும்
அறிவிலார், பவப்பிணியறுமோ''

ஞானவாசிட்டத்தில் சூடாலை, புசுண்டர், உத்தாலகர் யோக ஞானமுள்ளவர், மனமாகிய மருள் நீங்கி, அகண்டாகார விருத்தியே, மாயையாகிய தேசசால் விளங்காநின்ற பிரம்மா, விஷ்ணு. உருத்திரனாகிய சிவனிடத்திலும் செல்லக்கூடியவற்கு சொல்லவில்லை. மனோன்மணியின் விளக்கத்தை, மனமருட்சியில், மனப்பால் குடித்துமருளா நின்ற போலிகுருட்டு யோகியர், ஞானவழி முறை, சீவசாக்கிரம், சீவசொற்பனம், சீவசுழுத்தி, பரசாக்கிரம், பரசொற்பனம் பரசுழுத்தி, இதுகள் இன்ன யின்னதென்று, தனக்கே விளங்காமல் சாக்கிர சொற்பனத்தில் ஈசன் வேண்டுகோளுக்குவந்து தனக்கு வேண்டியதை, உதவிசெய்யப் பெற்றவுடன், அனுக்கிரகஞ், செய்ததாய், பக்தி ஞானவைராக்கிய மற்ற மிலேச்சாதியர்கள் சிலர் முன்னுள்ள பக்தி மூவர் மாணிக்கவாசகர் முதலாயுள்ளவர்கள் செய்த தோத்திர மலராயுள்ள புட்பம் நாளானதினால் வாடிவிட்டது போன்றும், சகுணேசனுக்கு புதுமலர் செய்து சாத்துவது போன்றும் தோத்திரப் பாமாலைகள் வேதாந்த ஒழுங்குஉரை யின்றிய அர்த்தங்களுஞ்செய்து சிலர் துண்டேடு விடுகிறார்கள், விட்டிருக்கிறார்கள்.

நிற்குணத்திற்குச் செய்யலாம் மாரிகாளியைப்போல

மயக்கோ! அருள்மயக்கோ!

ஒவ்வொருவரது, மனிதி மனித சரீரத்திலும் துரியம் துரியாதீதம் வரையில் முடிவாயிருக்க, பிரம்மா, விஷ்ணு உருத்திரர் மூவர் இருக்கிறார்கள் தனிமையான ஒவ்வொருவருக்கும், சிருட்டியாதி செய்வாரோ? ஒவ்வொருவரும் ஒவ்வொரு அண்டங்களை, சிருட்டியாதி செய்கிறவர் ஆனதினால் ஒவ்வொருவரது, சரீரமும் பகிரண்டங்களானதினால், நான் என்பது, சரீரம் என்று சொல்ல இடமில்லை

எனக்கென்று சொல்வது சொல்மொழி மாத்திரந்தான் என்ற முறையில் சொல்கிறது.

எண்ணிப் பார்ப்போமேயானால், அருள் சத்தி மருள்சத்தி-கிருபையின்றி(முழுக்கின்றி) மாயா(தேசசு) மயமாயிருக்கிறது. அதான்து மகேஸ்வரியானவள் பூரணவிழிப்புக்கு உருத்திரணி பூரணகிருபை செய்வாள் என்று அந்தர்யாமி அடக்கு முறையினால் எழிற்சிபெறவில்லை யென்று விளங்குகிறது.

ஆனால் இந்தநூலைப்படித்து விளங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்ல வில்லை. பிரியமுள்ளவருக்குத்தான் இது.

இதற்குமுன் அநுபவ ஆத்ம ஞானவிளக்க நூலில் சீவனுக்கு கற்பித சாக்கிரம், சொற்பனம், மீஞூரச்சியம் சுழுத்தி முதலானவைகள்தான் உண்டு என அறைந்துளோம். எனவே தாங்கள் விசார உணர்ச்சியை நிறுத்தி பூரா நிலையும் தெரிந்துகொண்டு பிறத தங்கள் கருத்தை சேர்த்துக் கொள்ளுங்கள்.

இந்நூலானது கருணாகரானந்தனாகிய அந்தர்யாமி பெருமையால் இந்நூலளிக்கப்பட்டது. யானென்பதில்லை.

சாத்துக்கவி உண்டானால்

சோத்துக்கவி உண்டு

இச்சுருதி சோத்துக்கவி யன்று.

துரியம் துரியாதீதமாகிய யேகாம்பரன் யாவும் தன்னிடத்தில் தாரகமாயுள்ளது சாத்துக் கவிக்கிடமின்று.

உ

சிவமயம்

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்,
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

கைவல்யத்தில் பத்துபேர் ஆற்றில் கரையேறினது.

| | |
|---|---|
| (1) ஆறு. | (1) சரீரம். |
| (2) சலம் ஓடிக் கொண்டே இருப்பது. வேறு வேறாய் புதிதுபுதிதாய் வந்து கொண்டே இருப்பது தண்ணீர் | (2) ஒவ்வொரு நினைவுகளும் வெவ்வேறு ஒவ்வொருசாக்கிரவிருத்தியும் சொற்பன விருத்தியும் வெவ்வேறு அந்தந்த விருத்தியில் உண்டாகிற சரீர உலகமும் வெவ்வேறு முந்தின சரீர உலகம் அல்ல வேறு வேறுதான் இதை கைவல்யம் பொன்னம்பல சுவாமி உரையில் 100வது பக்கத்திலும் விசார சாகரத்திலும் பார்க்க |

(3) செடி ஆற்றுக் தண்ணீரில் இறங்கினவர்கள் 10- பேர்.

[3] ஞானயிந்திரியம் 5 அந்தக்கரணம் 4 சீவன் 1 ஆகப் 10 பேர்

[4] கரையேறினஉடன் ஒருவனைக் காணோமென்றது அஞ்ஞானம் இருந்தால் நிற்கமாட்டானா? தண்ணீரில் போய்விட்டானென்று நிச்சயம் பண்ணினது ஆவரணம்.

[4] நினைவாகிய யிந்திரியவிஷயமும் அந்த யிந்திரியவிஷயமும் விட்டு மனோருச்சியமும் (ஏதோநினைப்பது) அந்த மனோருச்சியமும் விட்டுநினைவுயின்றி சும்மா சாக்ஷியாயிருந்தபோது சாக்ஷியென்று தெரியாதது அஞ்ஞானம் அந்த அஞ்ஞானமறைப்போடு சாக்ஷிதான் என்று விளங்கிக் கொள்ளாமல் இருந்தது ஆவரணம்

(5) ஆற்றில் போய்விட்டான் என்று அழுதது விட்சேபம்.

[5] மன [நினைப்பு] சேதாடுகூடிநான் சீவன் ஆண் பெண் சனன மரண முடையவன் யென்று துக்கிப்பது விட்சேபம்

[6] கரைமேல் செல்லக்கூடிய ஒருவன் அழுகையைப் பார்த்து பத்தாமவன் இருக்கிறானென்று சொல்லி அழுகையைவிட்டது பரோக்ஷஞானம்.

[7] பத்தாமவனைக் காட்டு என்றுகேட்க ஒன்பதுபேரையும் யெண்ணி மிஞ்சினநீதானே பத்தாமவனென பத்தாமவனாகிய தன்னை அறிந்தது அபரோக்ஷஞானம்.

(8) துக்க நிவர்த்தி

(9) தடையற்ற ஆனந்தம்

(6) ஞானனுபவ குருசாஸ்திரவாயிலாக எப்போதுமே நான் சனன மரணம் அற்ற சேதனப் பிரம்மமே நான் என்று அறிந்தது பரோக்ஷ ஞானம்.

[7] குருவால் முத்துரியம் சென்று ஷை முத்துரியமாகிய துரியாதீதத்தில் சென்று பஞ்சஇந்திரிய விஷயத்தில் இருப்பது அபரோக்ஷ ஞானம்.

[8] மூன்றுகாலத்திலும் சனன மரண துக்காதிகள் சாக்ஷியாகிய யெனக்கில்லை யென்பது துக்கநிவர்த்தி.

[9] எப்போதும் நினைவுள்ளபோதும் நினைவு அற்றபோதும் சாக்ஷியாகிய நான் சகச சுக சமாதியாய் இருக்கிறேனென்ற திடநிச்சயம் தடையற்ற ஆனந்தம்.

சாக்ஷி சொரூபமுதல் சீவாதி தேகாதிகளுக்கு வினு விடை.—

சாக்ஷியும், சீவனும் ஒரேகாலத்தில் தோன்றுகிறார்களா? வெவ்வேறு காலத்திலா?

விடை:- ஒரே காலத்தில்தான் தோன்றுகிறார்கள்சீவன் சாக்ஷிக்கு விஷயமாயிருக்கிறான். சாக்ஷியோ சுயம் பிரகாசம்

வினு- பூதாதி,உலகம்,உடம்புஞ் சீவனும், ஒரேகாலத்தில் தோன்றுகிறார்களா. வெவ்வேறு காலத்திலா?

விடை:-ஒரேகாலத்தில்தான், தோன்றுகிறார்கள், பூத உலகை உடம்பு சீவனுக்கு. விஷயமாயிருக்கிறது; சீவனே சாக்ஷிக்கு, விசேஷமான அந்தக்கரண, விசிட்டனுய் யிருந்துக் கொண்டு சுயம்,பிரகாசனுய் இருக்கிறான்.

வினு:-நமது தகப்பன்,நமது பிள்ளை நமது உடமபும்,உலகமும் ஒரேகாலத்தில் தோன்றுகிறதா வெவ்வேறுகாலத்திலா?

* விடை—ஒரேகாலத்தில்தான் தோன்றுகிறது, உலகமும் உடம்புஞ் சடமானதினுல் ஒன்றைஒன்றறியாது.

---

* சொற்பன உலகம் தற்காலம், உண்டானதில் நீண்டகுருகின காலதிருஷ்டி நிச்சியம்போல் சாக்கிரதிலும் நீண்டகுருகினதாக காட்டுகிறது,ஒரே மனம்தான் சாக்கிர உலகதேகத்திற்கு சொற்பன உலகதேகத்திற்கும் அதுவியவகாரியம் பிராதி பாசிகம் அது தூலஉலகதேகம்.சூக்ஷ்ம உலகதேகம்.

# சொரூப அநுபவம்.

---

வெறும் வெளியாகிய பிரம்மமே அறிவுவெளியாகிய ஆன்மாவாய் இருக்கிறது. ஷை ஆன்மாவாகிய சொரூபத்தில் எண்ணமாகியமனம் இந்திரிய விஷயதேக உலகப் பொருள்களை எண்ணி விருப்பு வெறுப்பு சுக துக்கங்களை மனம்மாயைபண்ணி தன்னையேதான் பார்த்து விருத்தியாகிய யெண்ணம் அற்றபொழுது ஆன்மசொரூபமாய் யெண்ணிலாக்காலம் அளவிறந்தகாலம் இருக்க.

பிறகு ஆன்மசொரூபமாகிய வெளியில் இருந்து எண்ணமாகிய நினைவுவந்து, 5–10 நிமிஷம் ஆன்ம சொரூபசமாதியில் இருந்தோம் என்று சொல்வது சரியாகுமா?

காலம் யென்பது நினைவில்தான் இருக்கிறது ஆன்ம சொரூபத்தில் காலதேசம்யில்லை அதனால் அப்படிசொல்வது சுருதி வேதம்யுக்தி அநுபவத்திற்கு விரோதமாகிறது

ஆனதால் அளவிறந்தகாலம் ஆன்மசொரூப சமாதியில் இருந்தோம் எப்பொழுதும் சமாதியாகவே இருக்கிறோம் என்றுசொல்வது சுருதியுக்தி அநுபவத்திற்குச் சம்மதமாகிறது

ஆனதால் முத்தரியம் சென்றவர்கள் எப்பொழுதும் சகச சமாதியாய் இருக்கின்றோம் என்று சொல்வதுதான் உண்மையான நிச்சயம் இதில் அய்யமில்லை.

சனகாதி மூன்றரை கற்பகோடிகாலம் சென்றபின் முக்தருனென்றும் விஸ்வாமித்திரர் புசுண்டர் இவர்கள் 1–2 கற்பம் தபமாகியசமாதியில் இருந்தார் என்றுசொல்வதுசுருதி யுத்தி அநுபவங்களுக்கு ஒவ்வவில்லை தப்பாகிறது உலகத்தில் கற்பமென்றால் மண்முதலானதுகள் யில்லாத பிரளயத்தில் மண்முதலானதுகள் யில்லை அப்பொழுது பஞ்சபூத பௌதிகமாகிய விஸ்வாமித்திராதிகள் சரீரமாத்திரம்யிருந்து நினைவு வந்து 1–2கற்பம் சமாதியில்யிருந்தார் யென்று சொல்வது சரியல்ல

பஞ்சப்பிரளயம் என்பது க்ஷணபிரளயம் தினப்பிரளயம் பிரம்மப் பிரளயம் விஷ்ணுப்பிரளயம் உருத்திரனுகிய மகாப்பிரளயம் என–5 ஒரு நினைவு வந்து நீங்கினது

க்ஷணப்பிரளயம் தினவின்றி தூங்குகிறது. தினப்பிரளயம் அதுசமயம் சீவனில்லாததினுல் சிருஷ்டி பிரம்மா இல்லை. பிரம்மாப் பிரளயம் சிருஷ்டி இல்லாததினுல் விஷ்ணு ரக்ஷிப்பில்லை விஷ்ணுப் பிரளயம் ரக்ஷிப்பு இல்லாததினுல் உருத்திர சம்மாரமில்லை, உருத்திரனுகிய மகாப்பிரளயம் 5.

இது ஈசுர சுழுத்தி பஞ்சப்பிரளயம் மிஞ்சி இருந்தவர் சர்வசாக்ஷி. மூன்று நினைவும் மூன்று பிரளயமாகிறது. மூன்றுநினைவு பரிபந்தம் நினைவுவிட்டிருந்து நினைவில்வந்து உண்மையை விளங்கிக்கொண்டு பிறகு மனத்தொந்த ஈசன் திருவிளையாட்டில் இருந்தார் என்றும் ஞானசாஸ்திரயுத்தி அநுபவமாகிறது

[அநுபவ விபரம்] கனவு இன்றி தூங்குகிறது. ஈசுரசுழுத்தி. இது துரியாதீதம் சர்வ சாக்ஷியாகிய சுத்தப்பிரம்மம் இது சுத்த சிவம் என்றும். இதைத்தான். அந்தந்த மதஸ்தரும் தங்கள். தங்கள் தெய்வமாகக் கொள்வர், கொள்ளுகிறார்கள்

இது ஈசுர சுழுத்தி பஞ்சப்பிரளயம் இஃது யுத்தி அநுபவம் இவ்வுத்தியினை இதற்குமுன் அநுபவ ஆத்ம ஞானவிளக்க நூலால் எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

[அநுபவம்] ஈசுர சாக்கிரத்திலேயேதான் விளங்கிக் கொள்ளலாம். மற்றும் ஈசுர சொற்பனம் அதிலாவது ஈசுர சுழுத்தி கனவு இன்றி தூங்குகிறது. இது பஞ்சப் பிரளயத்திலாவது விளங்கிக்கொள்ளும்படி ஆன்ம சாஸ்திரங்களில் விதிக்கவில்லை ஈசுரசாக்கிரத்திலேயேதான் விதித்திருக்கிறது

சுத்தப் பிரமத்தினிடத்தில் பிறகு மூலப்பிரகிருதி, அது அருள்சக்தி குண்டலிசக்தி, அவ்வியக்தம் பராசக்தி சிவ

காமி, மீனாக்ஷி காமாக்ஷி என்றும், அதில் உள் (வளை) பட்ட சாக்ஷியை பரசிவன் நடராசன் சொக்கலிங்கம் ஏகாம்பரன் என்று பெயர் விளங்குகிறது.

பிறகு தேசவ்சாகிய மாயை, அது சத்துவகுணம் அதில் அருள் சத்தியுடன் ஈசன் நோக்கால் மாயையுடன் பிரம்மா விஷ்ணு, உருத்திரன் தோன்றி விளங்குவர்.

கனவுகண்டிருப்பது ஈசுர சொற்பனம் அது சூட்சும உலகம் பிரம்மா, விஷ்ணு; உருத்திரர் மூவரும் சூட்சம சிருஷ்டியாதியைச் செய்பவர் அதில் சீவர்கள் சூட்சுமத்தைக் கண்டு சுகதுக்கம் அடைகிறது.

பிறகு அங்கிருந்தே மாயையாகிய, சக்தியைக்கொண்டு தூலஉலகமாகிய மனோன்மணி யிந்திரிய தூல சிருஷ்டி யாதியாகாரமாய் மூவரும் சிருஷ்டி திதி சம்மாரமாகிய தூல உலகத்தைச் சிருஷ்டிக்க சீவர்கள் மன யிந்திரிய விஷயாகாரமாய் பந்தப்பட்டு யிச்சையுடன் ஆங்காரமடைந்து தவிக்கிறார்கள்

கண்டஸ்தானம், மனம், யிச்சை நேத்திரஸ்தானம் புத்தி அபிமானம் விவகாரம் இது ஈசுர சாக்கிரம்.

இதில் ஈசன் சர்வ மனிதி மனிதன் மாடு மிருகாதி, மரமாதி பூமி இதுகளை ஈசன் பொதுவாய்ப்படைத்து ரக்ஷித்து

சம்மதிக்கிறார். இதில் ஜீவர்கள் என் பெண்சாதி, பிள்ளை பெண், தம்பி, தமயன், தாய், தந்தை, மாமன், மாமி, மைத்துனன் என்மாடு குதிரை [illegible] நிலம் என்று பாவித்து சற்பித்துக் கொள்வது ஜீவ-சிருஷ்டி.

இந்த ஈசுர சிருஷ்டியில் ஜீவன் இந்திரிய விஷய அபிமானம் ஜீவ சாக்கிரம இதைவிட்டு உள்ளேயே ஏகாமனதில் யோசிப்பது ஜீவ சொற்பனம் யோசிக்கிற மனமாகிய நினைவு இன்றியபோது ஜீவசுழுத்தி இதில் நினைவு சாக்ஷியில் ஒடுங்கி சாக்ஷீமாத்திரமாயிருக்கிறது. பிறகு நினைவுமைந்து தான் சாக்ஷி என்று தெரியாமல் இருந்தது அஞ்ஞானம் அதுஜீவனுக்கு காரணசரீரம் ஈசுர சாக்கிரத்திலேயேதான்.

ஜீவனுக்கு ஜீவசாக்கிரம் ஜீவசொற்பனம் ஜீவசுழுத்திருப்பதாகவும் அங்கே ஜீவனை அஞ்ஞானம் மறைப்பதாகவும் சிலர் சொல்லுகிறார்கள். நூல்களுக்கு தப்புரை எழுதுகிறார்கள். அது அநுபவத்திற்குச் சரியல்லவாக இருக்கிறது. பின்னும் வியஷ்டி மனவிருத்தி என்பது இந்திரிய விஷய தூலதேகம் 6 இந்திரியம் 10, மன அந்தக்கரணம் 4-லும் விட்டபோது என்பது மனவிருத்தி நினைவயற்றபோது ஜீவனே சாக்ஷியாக மிஞ்சுகிறது. இது தொம்பதசாக்ஷீ அகம்என்றும் சமஷ்டி தேக இந்திரிய அந்தக்கரணத்தையும் விசாரித்து அபிமான அகண்டாகார விருத்தியையும் விட்டது தத்பதசாக்ஷீ பிரம்ம

யமென்றும் அகம் பிர்ம்மமென்றும் இவ்வித சாஸ்திர விசாரணையையே அநுபவம் என்றும் சொல்லிவிடுகிறார்கள்.

அகம்- பிரம்மம் இரண்டுசாக்ஷியும் விசாரமுடிவு, இது ஒன்றேமுடிந்ததில்லை என்றும் சிலர்சொல்லிமுடித்து விடுகிறார்கள்.

நானானது பிரம்மம் என்றவிவேகவிருத்தியும்விட்டு நினைவும் அற்று சும்மாயிருப்பது அலிலக்ஷியம் என்றுசொல்லியிருக்கிறதே என்றுசொன்னால் பிறகு நினைவுவிட்டு இருப்பது நீண்டநாள்காலமாக பழகிநினைவு அறவேணும் என்றுசொல்லிவிட்டும் பிரர்கஷ்டம்நினையாமல் தங்களிஷ்டப்படி செய்கிறது சற்கருமம் இது நினைவு அற பழகினதாகவும்பிறருக்கும் சொல்கிறார்கள்.

அதுபிறர்கஷ்டமின்றி பிராணதாரணைக்கி, மாத்திரம் பிந்திரியவிவகாரமட்டும் செலுத்திபின்பூர்வபூர்வசென்மத்திலும் இப்பொழுதும் லட்சியத்தில் நினைவுஅறபழகிப்பழகின வர்களுக்கு நினைவுஅற்றுநிற்கும்.

நம்போன்றவர்கள் பூர்வபூர்வ விசாரமுள்ளவர்களுக்கு இப்பொழுது அது அசாத்தியம் ஆகுமானதால் "சொரூப

யம் 10 பேர் ஆற்றைநீந்தின சத்தாவஸ்தைகளின்படி தற்சாக்ஷி யை அறியும் அநுபவம்"

தேகமுதலிய விஷயாதிகளை யிந்திரிய நோக்கு அற்று நேத்திரம் பூரணவிழிப்போடு வாக்குமாத்திரமாய் நின்ற சமயம் கிரிசிய உலகதேகம் அறும் ஆவரணம் நீங்கி யிந்திரியம் விளங்கும் இதில் ஆவரணநீக்கம் இந்திரியத்தைவிட்டு நினை வோடு இருக்கும் சமயம் அஞ்ஞானமற்று சாக்ஷியில் மனம் விளங்கும் அதுசமயம் சீவன் அற்று மனம்சடமாயிருக்கும் சாக்ஷியாகிய அறிவில் சடமாகிய மனம்விளங்கும்.

நினைவும் விட்டபோது தொன்பத சாக்ஷிமாத்திரமாய் விளங்கி இருக்கும் இது மனவிருத்திநீக்கம் தொன்பத சோதனை தொன்பதசோதனை மாத்திரம் போதாது அப்பால் தத்பதசோதனையும் செய்யவேண்டும்.

அது அகண்டாகார விருத்திதான் சத்துவகுணமாயை அந்தவிருத்தியில் சத்துவத்தில் சத்துவம் விஷ்ணு சத்துவத் தில் தமசில்—பிரம்மா சத்துவத்தில் தமசிலே ருத்திரன் அவ்வி ருத்தியை மாயையென்றும் தேசசு என்றும் சொல்வர் இதில் உள்ள மூவருக்கும் தேசசு ஆணபடியால். அஞ்ஞானமாைப் பில்லை என்றும் இராப்பகல் அற்ற இடமென்றும் அதற்கு அப்பால் உள்ள மூலப் பிரகிருதியாகிய அசிபதத்திலுள்ள சுரனை தத்பதத்திலுள்ளபிர்மா, விஷ்ணுக்கள் அறியா

மென்றும் புராணுதியில் சொல்லுகிறது.

இந்த மூவர் இரக்கிறயிடத்தில் விருத்தி சென்றால் அகண்டாகார விருத்தியாகிய மாயை சடமாயும், சாக்ஷிமர்ம மாகிய அறிவுவிளக்கத்தில் மாயை சடமாய் விளங்கும் அகண்டாகார விருத்தியையும், விட்டபோது தத்பதசாக்ஷி பிரம்ம அறிவுமாத்திரமாய் இருக்கும், இது மாயைநீக்கம் இதுதத்பத சோதனை இதவும் போதாது அசிபதசோதனை செய்யவேண்டும்.

அதற்கப்பால் விவேகவிருத்தி இந்தவிருத்தியே அருள் சத்தியாகிய ஈஸ்வரி ஈஸ்வரன் மேலுள்ள விவேகவிருத்தியில் சென்றால் ஷெடி விருத்தி சர்வசாக்ஷி சுத்தப்பிர்மமாகிய அறிவில் சடமாய் விளங்கிக்கொண்டிருக்கும் இந்த விவேகவிருத்தியும் அற்றபோது முத்துரியம் முப்பாழும் நீங்கின துரியாதீதம் இது சர்வசாக்ஷியாகிய சுத்தப்பிர்மம் இந்த நிலை நிருவிகற்பசமாதி விதேகமோக்ஷம் பரமாத்மா நாழி அப்பு என்றும் துரியமாகிய விவேகவிருத்தியோடிருப்பது சவிகற்ப சமாதி கைவல்ய மோக்ஷம் சிவாத்மா என்றும் அருள் சத்தியோடு துரியத்திலிருப்பது நாழி உப்பென்றும் இது ஞானசாஸ்திர முறையென்றும் ஆகிறது.

விருத்தியற்று 5-10 20 நிமிஷமென்றாலும் நினைவென்றாலும் சரியே நினைவு சமாதியில் இருந்தோமென்று நினைவு வந்து சொல்வது சரியல்ல நாம் சாக்ஷியாயிருக்க சாக்ஷியினிடத்தில், நிமிஷம், நாழிகை, நாள், வருஷம் யுகம் கற்பமெல்லாம அற்று சுகசொரூபமாய், சகச சமாதியாய் இருக்கிறது நினைவில்தான் காலதேசம் நிமிஷம் நாழி வருஷம் யுகம் கற்பம் யாவுமிருக்கிறது. சாக்ஷியிலும் அருளிலும் இல்லை. மாயைவிருத்தி மனவிருத்தியில்தான் உண்டு. 5 10 நிமிஷம் சமாதியில் இருந்தோமென்றசொல் நினைவில்தான் ஏற்றிக் கொண்டது சாக்ஷியில் ஏற்றினது அல்ல.

முத்துரியம் சென்று 5 10 நிமிஷமோ அல்லது அதிகமாகவோ சௌகரியப்படியிருக்கலாம். வாசிட்டத்தில் ஒரு சாமம் கண்சிமிட்டும் நேரம நினைவுசாக்ஷியில் ஒடுங்கியிருந்தால் போதுமென்றும், இராமசுவாமியை வீரு லட்சியத்திலிருந்துகொண்டு ஷை விருத்தியாகிய மனத்தொந்த ஈசன் விளையாட்டை நேர்ந்தபடி விளையாடென்று சொல்லியிருக்கிறது.

அஞ்ஞான மன விருத்தி கற்பிதம் அதில் அபிமானி சீவன் கற்பிதம், பிராரத்த மூலமாகக் கொடுப்பது அகண்டாகார மாயை விருத்தி, அந்த சுக துக்கங்களை அடைவது மன விருத்தி. தானுகிய சாக்ஷிக்கு இல்லை. மாயை விருத்தி மன

விருத்தியை அசைத்துக் காட்டும். சீவன் கற்பிதம் ஆனதால் சுக துக்கத்தை கற்பிதமாக அடைகிறான்.

ஈசன் நியமித்தபடி மாயை விருத்தி நியமிதத்தை, மன விருத்தியாகிய சீவன் நிறுத்திவைக்க முடியாது. அதை நிறுத்திவைக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

அதானது பிரவிருத்தி பிராரத்தம், நிவர்த்தி பிரார்த்தம் என்று இருவகை நிவர்த்தி பிரார்த்தம் உள்ளவர்கள் விருத்தியை நிருத்திபிருப்பர். பிரவிருத்தி பிரார்த்தம் உள்ளவர்கள் விருத்தியை, நிருத்தி இருப்பர் பிரவிருத்தி பிரார்த்தம் உள்ளவர் 5—10 நிமிஷமோ, மனவிருத்தியைவிட்டு சவுகரியப்படியிருந்து பின்னரவோடு, பிறகு மனத்தொடர்ந்த ஈசன் விளையாட்டியிருப்பர்.

"சொற்பனத்தில் ஸ்திரீபுணர்ச்சியில் தோன்றின இந்திரியம் சாகிரத்தில் தோன்றுவானேனென்ற சங்கைக்கு" ஈசுர சுழுத்தியில் சுத்தப்பிரம்மமாய் இருக்கிறது, பிறகு ஈசன் சூட்சும உலக தேகங்களை கற்பித்துக் காட்ட அதில் மனதோடு கூடிய சீவன் சூட்சம ஸ்திரீயுடன் புணர்ந்து சூட்சம இந்திரிய சுகத்துடன் மன கற்பித சீவனடைந்து பிறகு ஈசன் தூல இந்திரிய உலகதேகங்களையும் கற்பிக்க சீவன்

தூலஉலகத்தேதக விஷயத்திலிருக்கிறது. வியஷ்டி தூலஉடம்பு கற்பிதத்தோடுதான் சூட்சும சரீரத்தின் புணர்ச்சி இந்திரியத்தையும் கற்பித்து தூல சரீரத்திலும் காட்டுகிறது. அது ஈசன்நியமம் சுபாவம் சகசம்.

ஈசன் தனது மாயையோடும் சீவன் தனது மனம் தனது, யிந்திரிய பிராண உலகத்தேகத்தோடு தான், சாக்கிரத்தில் வரும் இதிலே ஏதாவது கொன்று நீங்கிவருது சொற்பனத்தில் ஒருவன். கையை வெட்டின காயமுதிரங்கள் இந்திரிய மனதிற்குசுபாவம் அல்ல, அது ஈசுரசிருஷ்டியும் அல்ல (சீவனது மிதயிச்சை(மிஞ்சின ஆசை, மிகுந்த கோபம்) அகந்தை (தேகம் நான்) மமதை என்பெண் பொருளாதி இதுகள் சீவ சிருஷ்டி) சீவனது கோபாதிகள், அகங்காரக்கொடுமை அதை சாக்கிரத்தில் ஈசன் காட்டார் இந்திரியாதி, சிரமபிச்சை ஈசன் சிருஷ்டிக்கு வரும் கோபாதிகள். சீவசிருஷ்டி சூட்சுமசரீர கோபாதிகளினால் [அளவுகடந்த கோபம்] அதேட்டையால் உண்டான காய முதிரங்கள் ஈசன் சிருஷ்டியில் தோற்றமாகாது. புணர்ச்சி இந்திரியம் மாத்திரம் ஈசன் சிருஷ்டியில் ஏற்படும் தோற்றமே அது விதியாகும்.

சாக்கிரத்தில் புணர்ந்ததை நினைவில் [மனதில்] பிறகு இந்திரியத்தில் உண்டான தோற்றமுள்ள இந்திரியத்தை தேக

த்தில் காட்டுவதைப்போல், சொற்பனத்தில் மன இந்திரியத்தில் உண்டானதை சாக்கிர தேகத்தில் காட்டும் சொற்பனத்தில் தூலதேகமின்றி மனம் இந்திரியம் மாத்திரந்தான் இருந்து சூட்சமசரீரம் யாவையும் கற்பித்து தன் சூட்சும சரீரத்தில் ஏற்பட்ட இந்திரியத்தை சாக்கிரத்தில் தூலதேகத்தில் காட்டுகிறது. அது ஈசன் சக்திகள் கிரமம்.

ஒவ்வொருவரது மனிதி மனித சரீரமும் பகிர அண்டமாகிய ஈரேழு பதினாங்கு உலகத்தோடுதான் விளங்குகிறார்கள் அதன் விபரம் கீழான 7ழின மிருகயின விபரம்.

1. மிருக இனங்கள் ஒவ்வொன்றும் பிரம்ம அகண்ட பெரும்வெளி அது அறிவு வெளியாகிய சமுத்திரத்தில் நீரினாகிய குமிழி கிளம்பி 5 இந்திரியத்துடன் உபாதியாகிய மிருக உடமபை கற்பித்தும், சமஸ்த உலகத்தையும் கற்பிக்கிறது அதில் வரமுறையும் முன்பின் உணர்ச்சியின்றி இந்திரிய வாயில் நோந்ததை புணரும் புசிக்கும் மிருக யினங்களுக்கு உலகு மனித யினங்களைவிட வேறாகத் தானே கற்பித்துத் தோன்றும். அதற்கு பாபபுண்ணியங்களில்லை, ஆகாமியத்தில் கட்டுப்பட்டு ஜென்மத்திற்குவராது. பூர்வ பூர்வ பாபபுண்ணியத்திலுள்ள சங்கிதத்தால் உள்ளத்திற்குமட்டும், ஜென்மம் வரும் ஒவ்வொரு கீழான உலகம்

2. பக்ஷியினங்களும், பிரம்ம அகண்ட வெரும்வெளி அது அறிவு வெளியாகிய சமுத்திரத்தில் நினைவாகிய குமிழி கிளம்பி 4 இந்திரியத்துடன் உபாதியாகிய தன் பக்ஷி உடம்பைக் கற்பித்து சமஸ்த உலகத்தையும் தன் குறைந்த உணர்ச்சிப்படிக்கு கற்பித்து பார்த்து தொழிலில் அடைகிறது. மிருக குணத்தைவிட பக்ஷி இனங்களுக்கு உலகம் வேறாகத் தானே கற்பித்துத் தோன்றும் அதற்குப் பாவபுண்ணியங்களெல்லாம் மிருக இனம்போலவேயில்லை. பக்ஷி இனங்களுக்கு பூர்வ பூர்வ சஞ்சிதத்தால் உள்ளத்திற்குமட்டும் ஜென்மம் வரும். இதுகள் ஒவ்வொன்றும் தாழ்வான உலகம் மிருக உலகத்தைவிட தாழ்வானது பக்ஷி இன உலகம்.

3. ஊர்வன இனங்களும், பிரம்ம அகண்ட வெரும் வெளி, அது அறிவுவெளியாகிய சமுத்திரத்தில் நினைவாகிய சமுத்திரத்தில் நினைவாகிய குமிழி கிளம்பி 3 இந்திரியத்துடன் உபாதியாகிய ஊர்வன உடம்பைத்தானே கற்பித்து தன் குறைந்த உணர்ச்சியுடன் பக்ஷியைப்போலல்லாது சஞ்சரிக்கும் ஊர்வன இனங்களுக்கு தன்னினந் தவிர வேறு உலகு தோன்றுகிறதில்லை. அச்ஜென்மத்திலுள்ள பாபபுண்ணியமும் ஜென்மத்திற்குவராது. பூர்வ பூர்வ சஞ்சிதந்தான் ஜென்மத்திற்குவரும் ஒவ்வொன்றும் தாழ்ந்த உலக சிருஷ்டி.

4. விட்டில், கறையான் முதலிய இனங்களும் பிரமம் அகண்டவெனும் வெளி அது அறிவுவெளியாகிய சமுத்திரத்தில் நினைவாகிய குமிழி கிளம்பி 2 இந்திரியத்துடன் உபாதியாகிய விட்டிலாதி உடம்பைத் தானே கற்பித்து தன்னினமே சமுசயமாய் வேறு தோன்றுதிருக்கும். இவைகளுக்கு இனிவருகிற ஜென்மங்கள் மேலுள்ளது போலவேதான் ஒவ்வொன்றும் தாழ்ந்த உலக சிருஷ்டி.

5. சங்கு, நத்தை இனங்களும் பிரம்ம அகண்டவெனும் வெளி அது அறிவுவெளியாகிய சமுத்திரத்தில் நினைவாகிய குமிழிகிளம்பி 1 இந்திரியத்துடன் உபாதியாகிய சங்கு, நத்தையாதி உடம்பைத்தானே கற்பித்து தன் இன உருவமே தோன்றுது இருக்கும் இதுகள் ஒவ்வொன்றும் தாழ்வான உலக சிருஷ்டி.

6. புல், செடி, மரமாதிகள் பிரம்ம அகண்டவெனும் வெளி அது அறிவுவெளியாகிய சமுத்திரத்தில் இந்திரிய மனாதி பிராணம் இன்றியே மகா தலமாகிய ஒவ்வொரு தாழ்வான உலக சிருஷ்டி.

7. மலைகள், பாதாளமாகிய ஒவ்வொரு தாழ்வான உலக சிருஷ்டி.

தாழ்வான எழுவித அண்டப்பகுதிகளுக்கும் அந்தந்த உபாதியாகிய சரீரங்களை தோறும் ஈசனிருந்து சிருஷ்டிக்கிறார்.

இவைகளை புசிப்பது; மனிதமனித சீவனைப்போல பிராணன் மனம் இந்திரியமும் சரீரம் உதிரமுள்ளமாமிச மலமூத்திரமும் பொருந்தியது, மனிதர்களைப்போல அவரவரோடு துக்கமும், உடையது ஆனகால் அவைகளைப்புசிப்பது தன் உதிரமாகிய சரீரத்தையும் துக்கத்தையும் செய்துகொண்டவாகும் ஆன தால் முடிவான ஒழுங்குபின்றியது ஆகும்.

அது அன்றியும் மதத்தின்பேரிலும் ஏற்றிபுசிப்பதும் ஒழுங்கு இன்றியதுதான் பிராணன் மனம் இந்திரியம் இன்றிய தாவரங்களைப்புசிப்பது, விதியிச்சைப்பட்டு மனவிழை வோடு புசிப்பதை நான் தடுக்கவும் தடுப்பதுமாகச் சொல்லவி ல்லை எனது அருளோடுகூடிய விசாரத்தினது துணிபு.

## "மனிதர் முதல்–7–உலகம்"

---

மனிதர் ஒவ்வொருவரும் பிரம்ம அகண்டவெறும்வெளி அது அறிவுவெளியாகிய சமுத்திரத்தில், அறிவு வெளியென் றால், அறிவு [அருள்] வெளி (பிரம்மம்) சிவம்என்றாலும் சரி யே, அறிவுஎன்கிறசத்தியில்லாமல், பிரம்ம வெளியாகியசிவம்

இருக்காது சத்தியோடுதான் இருக்கும்சூடின்றி அக்கினி இல்லாததுபோல பிரம்மவெளி சத்தியாகிய அறிவுடன்தான் இருக்கும் அந்தஅறிவு வெளியில்இருந்தே அருள்விளங்கும் அந்தஅருளே தேகசாகியமாயை; அதேஉலகமாகிய, மநோன் மணி அந்த மநோன்மணியில் நான்எனது என்று பகுப்பு கள்ள மனம் இந்திரியவிஷய கோசரமாகிய சரீரமே, தானு இருப்பதும், அன்றியும் அந்தந்த சரீரங்களும் பரமன் ஆக்க ப்பெற்றவை. பகுத்தமுறையாய் என்னது பிரர்பிரரதுஎன்று அபிமானிப்பதுமாகிய பகுத்தறிவோடு ஒவ்வொருவரும் இருக்க.

ஒவ்வொருவரது சரீரத்திலும் ஈசன் இருந்து, ஒவ்வொரு தாவர மிருகாதி மனிதவரையிலுள்ள பகிர் அண்டஉலகத்தை கற்பித்துக் கொடுக்க, அதில் அவரவர் கருமப்படி ஒரு சரீர த்தை, நான்என்றும் அதற்குள்ளதை என் முறையானசுற்றம் சாதி உறவு பிறர் பிறர்சாதியென்றும் மனயிந்திரிய விஷய கோசர தேகமே தான்என்றும், சத்திய அபிமானத்தை உடையவராய் பந்தப்பட்டு பிறவியிலேயே தவிக்கிறார். ஆன தால் ஒவ்வொருவரும், பகிர அண்டமாகிய மனித உலகம்.

2 மனித கந்தர்வர் ஒவ்வொரு சரீரத்தில் சீவன் மன இந்திரிய விஷய கோசார சுகத்தோடு தன் சரீரம்வேறாக அன்

னிய சரீராதிபோல தன்சரீர அபிமானம் இன்றியே அசரீர
இந்திரிய விஷய கோசாரத்தோடு உள்ள யாவையும் பார்த்து
மன பரப்புடன் மகிழ்வையுள்ள சீவன்கள்.

அப்படி சீவன் மனஇந்திரிய விஷயங்கள் அலங்காரமாகி
யும் தன் தேகத்தையும், பிறர் தேகமாகவே பார்த்து யோகி
யைப்போல சகசமாகவே பழகினவர் மனித கந்தர்வர். மனி
தர்களும் சில சில நேரம் சரீர நினைவுயின்றி களிப்பது சகசம்
ஆனதால் மனயிந்திரிய விஷயத்திலேயே தன் தன் தேக ஸ்ம
ரணையற்று இருப்பது மனித கந்தர்வ உலகம்.

3 தேவர்ஒவ்வொரு சரீரத்தில் சீவன் மன [5] யிந்திரிய
விழிப்போடு மகிழ்ந்திருப்பது பொதுவாகத் தேவர்கள்.
அதில் நேத்திரியஇந்திரிய விழிப்பிலேயே இருப்பது தேவ
உலகத் தேவேந்திரன். அந்த நேத்திர இந்திரியத்திற்கு கீழா
னதுதான் மற்றஇந்திரியம். ஆனதால் இந்திரிய விஷயத்தை
யும் விஷய தேகமே தான் என்பதையும் நீக்கியிருப்பதுதான்
தேவர்கள். மனமாகிய நினைவு சத்தியோடு களித்திருப்பது
தேவஸ்திரீகள். புணர்ச்சியிலேயே இருப்பர் அது சில சில சம
யம் துற்குண சரீர அகங்கார இச்சைகள் வந்து பலாத்காரத்
தோடு சுகத்தைக்கலைப்பது அசுராதிகள், இந்த இருவருக்கும்
அடிக்கடி பகையானதால் தேவர்கள் உலகம்,

4. கருமத்தேவர் ஒவ்வொரு சரீரத்தில் சீவன் மனயிந்திரிய ( கருமயிந்திரிய) விஷய சுகத்தில் சுகமாயிருப்பது கருமத்தேவர்கள். சீவர்கள் கருமேந்திரிய விஷயசுகத்தில், சில நேரமோ கடிகையோ இருந்து அதை நீண்டநேரம் அனுபவித்ததாக ஆ, கா என்ற விழைவோடு இருக்கிறார்கள் அல்லாமல் ஸ்திரீயோ புருஷர்களோ விஷயசுகத்தில் இந்திரியம் நீங்கி 1 2. நிமிஷம் நினைவும் நீங்கியிருந்து பிறகு நினைவு வந்து ஆ. கா. என்று நினைத்து சுகம் நீண்டகாலம் இருந்ததாக விழைவோடு நினைவு உண்டாகிறது. ஆனதால் அந்த சுக சமயமோ அவ்விதம் பழகினவர்களோ யோகிகளைப் போல அப்படி இருப்பவர்கள் ஒவ்வொருவரும் பிதுர்களாகிய கருமதேவர் உலகம்.

5. தேவ குருவாகிய பிரகஸ்பதி, பிரகஸ்பதி யென்றால் வியாழபகவான் (அவர்) சமட்டி மன சங்கற்ப விஷயகோசர விஷயமே தானாகஇருப்பார் அந்த சுகத்திலேயே இருந்து இந்திரியத் தேவேந்திரனிடம் செல்வர் சென்றும் இந்திரனுக்கு நியதிக்கிரமங்களைப் போதித்தும், தன்உலகத்திலேயே இருப்பவர் அப்படி மனசங்கற்பவிஷய கோசர விஷயமே தானாகப் பழகினவர்களும் மனவிஷய சுகமே தானாக சிலநேரம் இருக்கிறதும் மனம் உள்ளிலேயே நினைவோடு களிப்பதும் யோகியைப்போலவே இருக்கிறதும் அதே சுகத்தில் சகசமாய்

பழகினவர்கள் தேவ குருவாகிய பிரகஸ்பதி உலகம் இதுமுதலாக தத்பதம்.

6. விராட்டாகிய பிரசாபதி சமட்டிமன அபிமானத்தை உடைய சீவனாகிய பிரசாபதி அவர் உள்ளமேய சமட்டி விஷய கோசர விழைவோடு இருப்பதும் யோகிகளைப்போலவும் ஆன்மவிசார ஞானத்தால் ஆன்மசுகத்தில் இருப்பதே போலவும் சகுண நிற்குண உபாசனைசெய்து முதிர்வடைந்தவர்கள் இப்பவே மனிதனல்ல உபாசனை வடிவமே என்று சொல்வது போலியல்ல உறுதி என்பதுபோலவும் சகசமாய் மனவிஷய கோசரத்தோடு இருப்பவர்கள் விராட்டாகிய பிரசாபதி உலகம்.

7. இரண்ய கற்பரான பிரம்மா சமட்டிமன விருத்தியாகிய இரண்யகற்பர் அவர் உள்ளேயே சமட்டி நினைவோடு இருப்பதும் ஆன்மவிசார ஞானத்தால் ஆன்மசுகத்திருப்பதைப்போல சகசமாய் உள்ளேயே நினைவோடுள்ள சுகத்திலிருப்பவர்கள் இரண்யகற்பரான பிரம்மா உலகம்.

சமட்டி நினைவு அற்றது சர்மசாக்ஷியாகிய சுத்தப்பிரம் அதாவது உபநிடம் வாசிட்டம் கீதை, கைவல்யம் மகாவாக்கியப்படி வியட்டிமனவிருத்தி தொன்பத வாக்கியம் சீவன்

விருத்தியற்றிருந்த அநுபவம் தொன்பத லக்ஷியம் விட்டலக்கணை அகமென்றும் வியட்டிமன விருத்திக்கு அப்பால் சென்றால் சமட்டி அகண்டாகாரவிருத்தி தத்பதம் வாச்சியம் ஈசன் விருத்தியற்றிருந்த அநுபவம் தத்பத லக்ஷியம் விடாதலக்கணை பிரமம். அகண்டாகார விருத்திக்கப்பால் சென்றால் அருளாகிய விவேகவிருத்தி அசிபதம் வாச்சியம் அருளோடு கூடிய பரசிவன். பர்யை மூலப்பிரகிருதி யென்றும் விவேக விருத்தியற்றிருந்த அநுபவம் அசிபதலக்ஷியம் விட்டுவிடாத லக்கணை சர்வசாக்ஷியாகிய சுத்தப் பிரம்மம்.

மகாவாக்கியப்படி இந்தப் பிரகாரம் சென்றவர்கள் துரியாதீத பிரம்மவெள்ளக்கடல்.

மனிதர்கள் மேல்சொன்ன ஏழும்சென்றவர் சுகம்எல்லாம் நுரையாம். மேல்உள்ள ஒவ்வொருமனித உடம்பை உள்ள சீவன்கள்மேலான ஏழுஉலகத்தையும் யோகியைப் போலதெரிந்து பழகினவர்கள் சுகம்எல்லாம் துரியாதீதத்தில் சென்றவர்களது பிரம்மவெள்ள சுகத்திற்கு நுரைதிவலையாம் என்றும் நூல்கள் கருத்து.

இப்பொழுதும் சீவர்கள் அறியாமையாய் இருந்தும் கந்தர்வர்முதல் துரியாதீதபரியந்தம் செல்கிறார்கள் விளங்காமல் இரு

ஆனதினுல் அவர்களுக்குத்தான் சீவஇச்சையாகிய மாமிசாதிபொசிப் பாகாதென்று சொன்னது. மருளாகிய மனவிருத்திஅபிமானம் விட்டும் அகண்டாகாரவிருத்தியாகிய மாயைவிருத்தி அபிமானநீங்கி விவேகவிருத்தியாகிய அருளையும் ஒடுக்கி துரியாதீதமாய் அதீதப்பட்டு அருளோடுவெளிப்பட்டு கிரிசியய்யாவும் அருள்மயமாய் அஸ்வமேதயாகம் முதலாகிய யாகங்களைச்செய்து சுத்தப் பிரமமணுகிய சீவன்முத்தன் அவனுக்குவிதிகள் இல்லையென்பது துணிவு

அஸ்வமேத யாகமென்பது பிராணணுகிய குதிரையை சுத்தப்பிரம்மமாகிய துரியாதீத அகண்டகுண்டத்தில் விஷயப் பிரயோசனப் பற்பலவிருத்தியாகிய சமித்துக்.குச்சியையும் நான் அகண்டபிரம்மவெளி என்கிறஞானக்கினியையும் விவேகவிருத்தி–அருளாகிய நெய்யையும்விட்டு யாகஞ்செய்து மிஞ்சிய அவிப்பாகமாகிய நெய்யைதான்தானே புசித்து அருளாய் விளங்கிய யாகம்முடித்தவன் சீவன்முத்தன்.

இதைப்போல என்வீட்டிற்கு நான்கர்த்தாயென்கிறஇராசனையும் நான்சீவன்யென்கிற மனவிருத்திஅபிமானப் பசுவையும் விஷய மனப்பாம்பாகிய சற்பத்தையும் அளவின்றியயிச்சையாகிய இந்திரிய ஆடுகளையும் புத்திர இச்சையாகிய புத்திரகாமேஷ்டியையும் இன்னமுள்ள யாகத்தை

யும், மேல்சொன்ன துரியாதீதமாகிய பிரம்ம அகிண்டகுண்டத்தில் அஸ்வமேத யாகத்தைப்போலவே, செய்துமுடித்தவன் தேர்ந்தநிலைவிடா சீவன்முக்தன் எனமுடிபு சுபம். சுபம்.

அநுபவ சகச விசேஷசாமான்யமாய் விளங்கும்.

சிவப்பிரகாச சுவாமிகள் துணை.

முற்றிற்று

சுபம்

உ

சிவம்.

# ஆத்மஞான சம்பந்தர்.

---

மூலாதார மென்று சொல்லப்பட்ட துரியாதீதமாகிய சொரூபத்திலிருந்து நாபி [தொப்புள்] ஸ்தானமாகிய துரிய மென்கிற மதுரைப் பட்டணத்தில் அருள் சத்தி (விவேக விருத்தி) யாகிய மீனாக்ஷி வந்து பட்டங்கட்டி அரசாண்டாள் பின்பு அருளொடு கூடிய சோமசுந்திர பாண்டியன் பட்டங் கட்டி அரசாண்டான் பின்பு நெஞ்சு [மாரு] நாபியிலிருந்தே வந்த விருத்தியாகிய சத்துவகுண மாயை அதில் பிரம்மா விஷ்ணு, உருத்திரன் மூவர் சிருஷ்டியாதி செய்ய அதிலி ருந்தே வந்த விருத்தி கண்டஸ்தானமாகிய யிடத்தில் முருக னிருக்கிற இடம் சரீரங்கள்தோறும் துரியமென்கிற மலைக்கு மேல் கண்டஸ்தானமாகிய மேல்குன்று மலையில் முருகன் வசிக்க அதை "குன்றுதோறாடுங் குமரனே" என்றும் பட்டங் கட்டி உக்கிரபாண்டியனென்று அரசாண்டதாய் திருவிளை யாடல்.

பூமியாகிய மண்ணுலகத்தில் உண்டான, மதுரைப்பட்டணத்தில் ஈசுவராதிகள் வந்து பட்டங்கட்டி அரசாண்டாரென்று சொன்னால் வருவாரோ? அவருக்கு பூமியில் இமயமலைக்கு அப்பாலுள்ள மலையில் கயிலாயம் வைகுந்தம் அதில் பிரம்மா ஒருபக்கம் உருத்திரனொருபக்கம். பூமிக்கு மேல் உலகத்தோடு தேவர்கள் ஏழுலகம், பூமிக்கு கீழேழுலகம் ஆதிசேஷ உலகமும் இருப்பதாய் பொய்கூத்து புலம்புகிறார்கள் இதுயென்ன அறியாமையோ?

ஞானசம்பந்தரென்பது சரீரத்திலேயேதான் ஞானத்தின் பொருட்டு சொன்னது. அதை பாகியத்தில் புராணமாக அறியாமை யுடையவர்களுக்கு வெளியிட்டிருக்கிறது. உண்மையானது ஆக்கிர (உள்) ந்தான். பாகியம் (வெளியில் ஸ்தூலமாகச் சொன்னது உண்மையல்ல.

துரியாதீதமாகிய முத்துரியம், சீவதுரியம், பரதுரியம், சிவ(குரு) துரியம் முத்துரியத்தில் சென்றவர் வேதமாகிய மேல்சொன்ன கண்ட ஸ்தானத்தில் கீனவாகிய மனம் அஞ்சு, இந்திரியம் அஞ்சு, விஷயமாகிய உலகதேக்வனத்தில் வேதாரண்யத்தில் வந்திருந்து பிறகு சீவதுரியம், பிறகு நெஞ்சாகிய பரதுரியம், பிறகு நாபியாகிய குருதுரியம் என்ற

மதுரையில் சீவர்கள் நன்மையடைய வேணுமென்ற ஏக்க முள்ளவர்கள் ஞானேந்திரியம் 5, மனம் 1, புறத்திலும் உள் ளிலும் சஞ்சரிக்கும்படியான புத்தி 1, அதில் அபிமான சீவன் 1, ஆக 8. இதினால் தோற்றப்பட்ட திரிசியவுலகம் உண்மையாய் எப்பொழுது மிருக்கிறது யென்ற வுணர்ச்சியை பிறகு விசாரித்து சாக்கிறத்திலிருந்த ஸ்தூலதேக வுலகம் சொற்பனத்தி லழிந்துபோய்விட்டது. சொற்பனத்திலுள்ள சூட்சும வுலகதேகம் கனவின்றி சுழித்தியி லழிந்துபோய் வெறும் அறிவு வெளியாயிருந்தது. ஒவ்வொரு அவஸ்தை யிலுள்ள உலகதேகங்கள் ஒவ்வொரு அவஸ்தையிலு மில்லை. கனவின்றி தூங்குகிற சமயம் துரியாதீதம் ஈஸ்வர சுழுத்தி பஞ்சப்பிரளயம் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன, மகேஸ்வரன் சதாசிவன் முதலியவரிறந்துபோன பிரளயம். அது வெறும் அறிவெளிதானுள்ளது.

கைவல்யத்தில் சிஷ்யன் ஜனன மரண துக்கம் நீங்கி மோட்சத்தின் பொருட்டு குருவைக்கேட்க பந்தத்தை தரும இச்சையை விடுவென்று சொல்ல, ஆனால் ஈசன் சிருட்டி யிலிருப்பதா லிச்சையை விடமுடியாது ஈசன் சிருஷ்டி ஒழிந்தபோதடைந்தாயா யென்று குரு சொல்லிக்கேட்க "சுழுத்தியில் பிரளயத்தில் தோற்றமாம் சகங்கள் மாண்டும் அழுத்திய பவம்போய் முத்தியடைந்தவருண்டோ'! என்று

சொல்லிக்காட்ட, சிஷ்யன் சுழுத்தியிலும் பிரளயத்திலும் பிரம்மா முதலிய உலகதேக மழிந்துவிட்டது சுத்தப்பிரமம் தானுள்ளதேயென்று தெரிந்தான்.

இதுபோல் பிறகு ஒவ்வொருவரது சரீரமும் பகிரண்டங்களானதினால் பிரம்ம சொரூபத்திலிருந்து ஒவ்வொருவரது நினைவாகிய குமிழ் கிளப்பி சூட்சும வுலகமாகிய சொற்பன வுலகத்தை கற்பித்து பிறகு ஸ்தூலவுலகமாகிய சாக்கிர வுலகத்தையும் தன் தன் சரீரத்தையும் கற்பித்து அவரவர்கள் சரீரத்திலுள்ள பிரமாதியர்கள் கற்பித்துக்காட்ட அவரவர்கள் பார்க்கிறார்கள்.

ஆனதினால் உலகாகிய தேகம், இந்திரியம், மனம் யாவும் ஒன்றாகிய பிரம்ம சொரூபம் அதன் சக்தியினால் தோன்றி யாவும் விளங்குகிறது அதனால் யாவும் சமமே. பேதமின்று துரியப்பொருளொன்றே யென்று முன்னமென்று இந்தப் பிரகாரம் விசாரித்தறிந்தவர்கள் சமணர்கள் எண்பதாயிரம் மதுரைப் பட்டணமாகிய துரியத்திலுள்ள விவேக விருத்தி தான். கூன் பாண்டியன் மனதில் காம குரோதமாகிய ஆறும் கூன் சரீரத்திலுள்ள விருத்திகளுக்கு அரசன் விவேக விருத்தியாகிய அரசனிடம் மேற்சொன்ன எட்டிலும் விசாத்து துரியமொன்றே தான் என்று முன்னமென்று

ஆராய்ந்த( விசாரித்த )தால் எண்பதாயிரம் சமணர்கள். இந்தப்படி விவேக அறிவோடு கூடியவர்கள்தான் சமணர்கள்.

ஞானசம்பந்தர் பன்னீராயிரம் திருக்கூட்டம் யாரென்றால் ஞானேந்திரியம் 5. கருமேந்திரியம் 5. மனம் புத்தி 2. ஆக 12.(மனம் 1. புத்தி 1. இந்திரியம் 5. சீவன் 1. ஆக எட்டிலும் பற்றி பற்றினதால், 10 விவேகவிருத்தி யாவும் பிரமமென்று விசாரித்ததிலும் ஆயிரம் 80 ஆயிரம் சமணர்கள் சில புராணத்தில் 8 ஆயிரம்) இதில் சீவன் உலகதேகம் நிச்சயமில்லை, சாக்கிரத்திற்கு சாக்கிரம் உலகதேகம் மாறிமாறி அழிகிறதினாலும், அதுபோல் சொற்பனத்திற்கு சொற்பன உலகதேகம் மாறிமாறி அழிகிறதினாலும் உலகதேக மித்தையேயென்றும் முத்துரிய துரியாதீதந்தான் அழியாதென்றுமுள்ளதென்று விவேகத்தோடு பற்றி பற்றி ஆய்ந்து விசாரித்ததினால் பன்னீராயிரம் திருக்கூட்டம் இவர்கள் மதுரைப் பட்டணத்திலே என்றதுரியப்பட்டணம் அதில் சைதன்யமாகிய சண்டாளதானத்தில் வந்திருக்க.

விவேகவிருத்தி துரியப்பொருள் ஒன்றேதான் உள்ளது மற்றது மித்தையென்றே ஞான அக்கினியை சமணர்கள் (சீவன் முத்தர்கள்) உண்மையென்றுவைக்க அந்த ஞான அக்கினியினால் துரிய சொரூபமே தானென்றும் இயற்கையாயுள்ள விவேக விருத்தியாகிய விவேக அரசனுக்கு ஜ்வரம்

பற்றிக்கொள்ள (கோயில்) கோ-பசுவாகிய ஜீவன் ஜீவாத்மா இல்-பரமாத்மாவாகிய சிவம் என்றாலு, பிர்மமென்றாலும், எந்தெந்த மதப்படி சொன்னாலும் சரியே. ஜீவாத்மா பரமாத்மாயென்பது, அப்படிச் சொல்வதுஇன்றி துரியம் ஒன்றே உள்ளது என்பதனால் மீனாட்சிகோயில் அடைபட அதை அனுபவியான சம்பந்தர் துரியசொரூப விருத்தியும் விட்டிருப்பது என்ற சுரத்தை நீக்கி துரியாதீதத்தில் இருக்கவைத்ததும் பிறகு மனம் கிளியென்ற கழுகு ஜீவனைப்பிடுங்கித் தின்ற கழுகை கண்டஸ்தானத்திலிருந்ததை நாபிஸ்தான துரியத்தில் ஏற்றினதாகவும் இச்சையாகிய பறவைகள் பறந்து விட்டது.

பிறகு (விருத்தி) மனம் இந்திரியம் விஷயபரியந்தம் வந்து யாவும் அருள்மயமாய் இருப்பதை பட்டினத்தடி பார்த்தவிடமெல்லாம் பரமரக்கண்டேனடி ஆர்த்தவிடமெல்லாம் அருளாயிருக்குதடி' விருத்தி வெளியில் வந்து உலகு அருள்மயமாய் விளங்கியதை மீனாட்சிகோவில் திறந்ததாகவும் என்ற உணர்ச்சி ஞானத்தை அறியாமையா யுள்ளவர்களுக்கு பாகியத்தில் சரித்திரமாக எழுதியிருக்கிறதை விளங்காமையால் :தேத்துவேஷம் சொல்லிப் பிதற்றுகின்றார்கள்.

கடவுள் கடப்-சரீரப் மனப்-நினைவுக்கும் உள் -உள்ளே மனதிற்குச் சாக்ஷியாக இருக்கிறான். சரீரங்கள் தோறும் உள்ளே கடவுள் இருக்கிறார் அந்த கடவுள்சக்திக்கு எல்லா மதப்பக்தியுடைய சரீரேய, எவ்விதத்திலும் சீவர்களுக்கு மனதை சந்தோஷப்படுத்தும்படி செய்வது கடவுளுக்கு பணிபக்தி செய்ததாகும். துக்கமுண்டுபண்ணுவதுதான் கூடாது.

அசற்குபிரமாணம் எலும்பை பெண்ணாக்கினது ஞான சம்பந்தர் சிவநேச செட்டியார் பெண்ணேயென்றது துரியா தீதப் பரமாத்மாவாகிய ஞானசம்பந்தர், துரியம் சீவாத்மா வானவர் துரியாதீதப்பொருளே நான் என்று நிச்சயித்துச் சொல்லிய கண்டஸ்தான மனவிருத்தி, பிறகு நெஞ்சில் அக ண்டாகார விருத்தியில் தங்கி பிறகு நாபிஸதானம் வந்து தங்கிய விவேக விருத்தியாகிய சிவநேச செட்டியார் அதிலிரு ந்து கண்டஸ்தானத்தில் வந்த விருத்தியாகிய மனம், சிவநேச செட்டியார் பெண் அதானது ஈசனுலளிக்கப்பட்ட ஒரு சரீ ரம் எலும்பினுல் ஆக்கப்பட்டதை நான் என்றும் மனம் என் பதை இச்சையாகிய முத்தாபவிஷய அக்கினியால் தகிக்கப் பட்டு மனமாகியபெண் இறந்துவிட்டது அதானது மனந் தான் துக்கப்பட்டது சந்தோஷப்பட்டது யாவும் என்றறியா மல் எலும்பாகிய சரீரமே நான்என்று பழக்கத்தில் நாளடை வில் வந்துவிட்டது அதைப் பூதமண்ணுகிய மாமிச சரீர கும்பத்தில் (கலசத்தில்) எலும்பைவைத்து என்றும் துரியா

தீத அனுபவிஞானியாகிய ஞானசம்பந்தர் கண்டஸ்தானம் சீவதுரியம் முருகன்சக்தி அதானது மனம் இந்திரியம் 5 இது கள் நாலுவித விசித்திரமாய் உலகை காட்டப் பெற்றதற்கு மயிலென்றும் சீவசாக்ஷியை முருகன் ஆம்பென்னும் சீவவிரு த்தியைக் கட்டப்பட்டசாக்ஷியை மூளையாய் விருத்தியாகிய சக்திகள் கட்டுப்பட்டிருப்பதை இவ்விதமுள்ள மைலாப்பூரில் சீவசாக்ஷியூரில் சிஷ்யனாகிய பெண்ணை வைக்கவும் அசற்கு ஞானசம்பந்தர் நானென்றுசொல்வது சரீரமல்ல நினைவுதான் நான் ஆண் பெண் என்று நினைத்தது. ஆனதினால் நினைவாகிய மனம் தானென்று சொல்ல, அந்த சிஷ்யனாகிய பெண்தான், நினைவோடு கூடிய சீவன் சீவசாக்ஷி என்று சொல்லிக் காட்டி னதை விளக்கிக்கொண்டு சரீரம் நானல்ல என்று விளங்கி னதை கும்பம் வெடித்ததாகவும் சொல்லி யிருக்கின்றார்கள்.

பிறகு மனமாகிய நினைவை அப்பால் நெஞ்சினிடத்தில் அகண்டாகார விருத்தியோடு கூடிய பிர்மா விஷ்ணு உருத்தி ரன் மூவர் இருக்கப்பட்ட சாக்ஷியில் அது தற்பத சாக்ஷியில் இருக்கவைத்து பிறகு கணவனாகிய புருடன் தங்கியிருக்கிற இடம் நாபிஸ்தானம். விவேக விருத்தியோடு பரசிவன் யிதி சாக்ஷி குரு துரியம் இது யேக அறிவுவெளி. இந்த அகண்ட துரியத்தில் சீவவிருத்தி ஒடுங்கி பிறகு நினைவு வரும்படி காட் டிக் கொடுத்ததை விவாகஞ் செய்துவிட்டதாகவுமுள்ளதை

அறியாமையும், இச்சையோடு தாகமுள்ளவர்களுக்கு பாகியத்தில் சரித்திரமாகச் செய்திருக்கிறதை சித்தாந்த ஞான சாஸ்திர ஞானவுணர்ச்சியுள்ளவர்களும், வேதாந்த ஞான சாஸ்திர ஞானவுணர்ச்சியுள்ளவர்களும், அவர்களைக் கொஞ்சம் சாஸ்திர விசாரமுள்ளவர்கள் பாடமாகவோ விசாரத்திலோ கேட்டாலும் இது தெரியாமல் அய்யப்பாடின்றி பாகிய உலகில் நடந்தது என்றே சொல்கிறார்கள். ஆனால் உண்மை விளங்கினவர்களிருக்கலாம். அவர்கள் வெளியிடாமலிருப்பதால் விசாரத்தினால் விரும்பி தற்சாக்ஷியை அறிய விரும்பினவர்களுக்கு பிரயோசனமில்லாமல் போகிறது. அவர்களின்றி வேதாந்த சித்தாந்திகள் யாவருக்கும் எலும்பை பெண்ணாக்கினது என்று சொன்னதுபோல் மண்ணை பொன்னாக்கினாலும், கற்கள் குன்று சிறுமலைகளை வைரம் இரத்தினக் கற்களாகவும், இறந்த வாலிபப்பெண் ஆண்களை உயிராகவெழுப்பிவிட்டாலும் மூடர் கொண்டாட்ட மின்னமதிகமிருக்கும். இது என்னவறியாமை. யாவரும் துரியாதீதப் பிரம்ம சொரூபமொன்றே என்ற வுணர்ச்சியுள்ள பரமாத்மாவான ஞான சம்பந்தர் தற்கொலை 80 ஆயிரம் பேர் செய்துக்கொள்ளும்படியான காரியத்தில் செல்வாரோ அவர் சர்வ ஜீவகாருண்யர்.

பூச்சி புழு முதலிய உயிர்ஹிம்சை செய்யாத சமணர்கள் 12 ஆயிரம் திருக்கூட்டத்தாரை மடத்தில் இராத்திரி 12 மணியில் நெருப்பை வைப்பாரோ அறியோம்.

பிரமம் அனந்தஞ் சத்திமான் தன் சத்தி சகல உலக பேதகமாகத் தோற்றிவைக்கிறது. அவரவர்கள் சரீரத்தில் துரியம் துரியாதீதம் பிரமம் சர்வ சத்திமான் ஒரே வஸ்து. அதன் சக்தி சகல உலகமாகக் காட்டுகிறது. ஒரு ஒரு சரீரங்கள்தோரும் வேறு வேறு அல்ல. மனம் இந்திரிய பிராணன் உள்ள சீவர்களிடத்தில் ஹிம்சையின்றி காக்குந் தன்மையான சமணர் சமயந்தானுள்ளது. அதில் சென்றால் மோக்ஷமென்ற கரை நிலைக்கும்.

சைவமென்று சொல்லிக்கொண்டு விபூதி உருத்திராக்கம் தரித்து சீவர்களுக்கிம்சையான புளுகு புரட்டு எத்திப் பொருள் பரிக்கிறதும் யாகம் சுவாமிக்கு பலி அம்பாள் வாம பூசை மாமிச சூலை தெய்வ பூசை யோகமென்று சொல்லி ஆடு முதலிய ஜீவர்களை வதைப்பது கடவுளுக்கு இம்சை செய்ததன்றி வேறன்று. நாதந்தானுறுதி இதுகள் பாபமிகுதியாயிருக்கும்போது புண்ணிய நன்மையென்பதேது புரட்டேதான் இது நிச்சயம்.

சமணமென்பதை இப்புறட்டர்கள் மூடர்மருளுடையோர் பாபி விபூதிருத்திராக்கம் யாகாதிகளின்றிய ஈஸ்வரத்துரோகி அவர்கள் சம்பந்தங்கூடாது விபூதிருத்திராக்கம் தரிப்பது நல்லொழுக்கமென்று சொல்லி யோட்டிவெழுதி மோலான நூலென்றுபெயர் கொடுத்து நாளடைவில் ஜனங்களுக்கு நினைவிலும் சரீரத்திலும் புகுத்தி சமணர்வர்களிடத்திலும் த்வேஷமும் கூடவே ஏற்றிக்கொண்டு நாளடைவில் பலத்து விட்டதென்ற உண்மையையறியாமல் உலகத்திலிருக்கிறார்கள் சமணரவர்களுக்குத்தான் கடவுள் கிருபையாகும் கருங்கல்லினால் கோவில் கட்டினவர்களுக்குகூட யாகாது யாகுமென்பது பகட்டேதானாகும் இனியாகிலும் சீவர்களிடத்தில் தன்சரீர இம்சைபோல் என்றும் காருண்ய நிறைவுடைய சமணர்களிடமன்புபாராட்ட நாமிதுபரியந்தம் கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் மின்னான்மையென்ற நிச்சயமுள்ளவர்கள் மூடஅறியாமையை நீக்கியாவும் சமமென்ற உணர்ச்சியுள்ள, சமணர்களிடத்துள்ளாருக்ஷி தான் யுண்மையாய் மற்ற மதஸ்தர்போல கெடாமல் ஸ்திரமாய் யிருந்தது என்று அன்புபாராட்டுங்களின்ன மீசனன்புள்ளவர்களிடத்திலுமன்பு பீமன்மையைச் சொல்லிக்காட்டுங்கள், ஈதுண்மை என்று நிச்சயமில்லாதவற்கு சொல்லவில்லை.

அஞ்ஞானி ஞானி மனிதி மனித சீவர்கள் யாவுமொன்றான சாக்ஷியென்று விளங்காமல் அஞ்ஞான விசேடமாய் நான் சீவன் பிராமணன் பிள்ளை ஆண்பெண்ணென்று சாதிபேதமாய் உயர்வு தாழ்வுவாகிய அபிமானத்தோடு இருந்தமையால் அஞ்ஞானசாமான்யத்தில் லடங்கினரடங்குவர் ஞானியாகிய சீவன் முத்தன் முன் அஞ்ஞான விசேஷமாயிருந்தாலும் பின் வேதாந்த விசாரகுருவால் முத்தரிய அநுபவ ஆத்மஞான விசேடனாய் விளங்கினதினால் ஆன்மசாமான்ய துரியாதீதத்தி லடங்கினரடங்குவர் மாணிக்கவாசகர் முதலாயினர்களில் இவ்விதம் தான் துரியாதீதசோதியிலடங்கினர். அதை உலகில் அறியாமையுடையவர் நாமரூபசோதி மண்ணுலக சிதம்பர நடராஜ செம்பு விக்கிரக உருவத்தில் ஐக்கியப் பட்டதாய் சொல்லுகிறார்.

ஞானபூமியேழு 1 சுபேட்சை சுபம் ஆன்மாவாகிய பிரமம் இச்சை அதைவிளங்கிக்கொள்ள தீவிரம் 2 விசாரணை குரு சாஸ்திர அறிவாளிகளுடன் விசாரிப்பது 3 தனுமானசி தனு சரீரம் மால் மயக்கம் (அஞ்ஞானம்)தோடு உயர்வு தாழ்வாய் சரீரத்தை நினைந்ததை விசாரதிடத்தால் பிரமம் நான் யென்று

ரோக்ஷ ஞானமாய் யறிதல் 4 சத்துவாபத்தி சத்துவம் ஆன்மாவாகிய பிரம்ம சொரூபம் ஆபத்தி இச்சையோடுதாய் தங்யோடு தேகத்தை நான் மனிதனென்று திடமாய் ஐயமின்றிருந்தது போல்தத்துவமசி மனவிருத்தி அகண்டாகாரவிருத்தி விவேகவிருத்தி 3லும் அநுபவ குருவால் ஒரு ஒருவிருத்தியில் சென்று மூணுவது விவேகவிருத்தியும் ஒடுங்கி துரியாதீதத்திலிருந்து பிறகு மனவிருத்தியோடு அபரோக்ஷமாயிருப்பது 5 அசம் சத்தி அம்சம் சத்தி உலகத்தை சாக்ஷியாகிய தன் சக்தியம் சமாகவேபார்த்திருப்பது 6 பதார்த்தபாவனை அகமும் புறமும் அருள்வடிவாய் மகிழ்ந்திருப்பது 7 துரியப் பேருதுரியாதீதமே உபயதிருவடியாய் மகிழ்வோடிருந்ததை மகிழ்வுமற்றருப்பது இதுகள் ஒரு ஒருசீவசரீரத்திலும் யேழுபூமியின் அடைவுமிருக்கிறது ஒருவர் 4 ஒருவர் 5 ஒருவர் 6 ஒருவர் 7 ம் தனித்தனியாக இருக்கிற அநுபவமில்லை.

முருகன் நாதவிந்து கலாதி நமோ நமோ வேதமந்திர சொருபா நமோ நமோ,

நாதம் – வாக்கு சத்தம். விந்து – மனம நினைவு.

அதீதம் சாக்ஷி முருகன்.

மனம் மனோன்மணி வாக்கு சரஸ்வதி யிருவர் வேதம்

மனம் மந்திரம் வாக்கு சாக்ஷி முருகனுக்கு ஓதுகிறார்கள் இரண்டும் தன்னிடத்தில் தோன்றினது விந்து சித்த போதே வந்து சித்த நாதம் எந்தவிதம் செய்யவுமோ அந்தவிதம் செய்யும் மனோமணியாகிய மனம் எவ்விதம் நினைவா அவ்விதம் வாக்கு சரஸ்வதியாகிய வாக்கு பேசும்.

நாலு வேதம் துரியாதீதம் நாபிக்குக்கீழ் மூலாதாரம் தொனிபாட்டின்றியது அதர்வணவேதம்,

நாபிஸ்தானம் துரியம் பரசிவன் சாமவேதம் தொனிபாட்டுடையது.

நெஞ்சில் பிர்மா விஷ்ணு உருத்திரன் மூவரிடம் யசுர் வேத தொனிபாட்டுடையது.

கண்டஸ்தானம் முருகனிடம் உருக்வேதம் தொனிபாட்டுடையது அதர்வணவேதமேதான் துரியாதீத சர்வசாக்ஷியாகிய சுத்த பிரம்மம் இதை விவேகாந்தரு மிவ்வித சித்தாந்தம்.

வேதாந்த மென்பதிப்போது விசாரஞானம் தொன்பதம் தற்பதம் வாச்சிகம் மனவிருத்தி அகண்டாகாரவிருத்தி இரண்டுவிருத்தியும் நீங்கினது லட்சியம் அகம் பிரம்மம் ஈதிப்போது வேதாந்தமுடிவு சிலர்.

சித்தாந்தம் சித்தமிருக்குமிடம் நாபித்தானம் விவேக விருத்தி அசிபதம் பாசீவன் அந்த விருத்தியும் நீங்கின்று அசிலட்சியம் சர்வசாக்ஷி சுத்தப்பிரம்மம் சித்தமிருந்த விடம் விவேக விருத்தி விவேக விருத்தியாகிய சித்தமற்றவிடதான் சித்தாந்தம் இதனால் தாயுமானவர் வேதாந்தசித்தாந்த சமரச நன்னிலை என்றார்.

ஆறுசாஸ்திரம் ஞானேந்திரியம் 5 மனம் 1 ஆக 6 இது தரன் ஆறுசாஸ்திரம் ஆறிலும் நினைவோடு கூடிய சீவன் விருத்தி பலபலவிதம் தற்குணமநேகவிதமறிந்தவர் உள்ளிவில்லாமல் நீக்கவும், பிராது இச்சையிம்சையின்றி தற்சாக்ஷியை யறியும்படியறிந்து நற்குணத்தோடு மனுஷசன் மனத்தோடு கூடிய சீவன் கிரமஉள்ளத்திற்கு விதிப்படி நடப்பத்தான் ஆறுசாஸ்திரம்.

பதினெண்புராணம் பத்து இந்திரியம் இதில்-சீவன் மனத்தோடுமனதை விட்டு சீவனில்லை சீவன் பத்திலும் விஷயத்தி லெட்டினதினால் எட்டு விஷயத்தை பற்றினதினால் பதினெட் பற்பல விஷயத்தில் சீவன் நடந்தாலுமதான் சாக்ஷி விவேகத்தோடு சீவர்களுக்கு தனக்கும் நன்மைதீமைகளில் சந்தோஷமாய் பூரணிக்கச்செய்கிறது 18புராணம்.

28 ஆகமம் ஞானேந்திரியம் 5 கருமேந்திரியம் 5 பிராண இந்திரியம் 5 கரணம்பொது 6 ஆக 20-ம் ஆகம் - சூட்மம் - சரீரம் இந்த ஆதத்தில் சீவன் விஷயத்திலெட்டினதினால் 28 ஆகமம் இதில் சீவன் விசாரஉணற்சியோடு கிறமத்தில் நடப்பது 28 ஆகமம்

64 கலை - ஞானேந்திரியம் 5 காணம்பொது (1) இது ஆறும் இதில் சீவன் பத்தினதினால் பத்து 6 பத்து 60கரணம் தொழில் காரியத்தால் மனம்புக்தி சித்தம் ஆங்காரம் 4 ஆக 64 லும் சேர்ந்து விஷயத்தில் கலேந்து கலேந்து பஞ்சவிஷயத்திலும் மாறி மாறி சீவன் சாக்ஷீநானென்று விவேகத்தோடு சஞ்சரிப்பதினால் 64கலை 96தத்துவம் ஸ்தூலதேக பரியந்தம் வேதமுதல் 96 தத்துவம் வரையில் ஒவ்வொரு சரீரத்திலும் இருக்கிறது. சாக்ஷீவிவேக விருத்தியோடு இதன் கிறமப்படி நடப்பதுதான்விதி இதையன்றி வேதமுதல் 96 ம்வேறுய்யெனக்குவிளங்கவில்லை.

ஈசுர சீவர்களுக்குசிருஷ்டியாதிர் பூர்வ பூர்வ ஜென்மவாசனை பிராரத்தம் ஜென்மாந்தரவாசனை பூர்வபூர்வவிஷயவாசனை

ஒருஒரு சாக்கிரவுலகமேதகமும் பின்பின் சாக்கிறத்திலில்லே வேறு வேறுதான் அந்தந்தபூர்வசென்ம வாசனையைக்கொண்டு தான் நான் பெண் புருடன் மனே மக்கள்சாதி என்உறவினர் என்வீடு நிலம் யென்றவாசனே ஏறிக்கிடக்கிறது. இதுதான் பூர்வ பூர்வசென்மவாசனே 5 இந்தவாசனே ஏறிதான்குடும்பாதி சாதிபேதம்முதலானதுகள் மனதிலேறி மூவாசையாகிய இச்சை திடப்பட்டு ஆசையைவிடமுடியவில்லேஎன்கிருர்கள்.

முன்சென்மாந்தரத்திலுள்ளது இப்போது குழந்தையாய் பிறப்பதற்குமுன்னுள்ள பிள்ளே, பெண் சாதி, வீடு, ஊர், நிலம் சொத்து, பணத்துகைகள், அது இப்பொது இல்லே அந்தவாசனே ஏறவுமில்லே அறியாமையால் பூர்வ பூர்வ சென்மமென்பதை சென்மாந்தரத்தில் ஏற்றிச்சொல்கிருர்கள்,

பிரார்த்தமாவது, சென்மாந்தரத்தில் செய்தபாபபுண்ணியத்திஞல் மாயையோடு ஈசன் மனதோடு சீவனுங்கூடிசெய்ததிற்கு யளவில்லே அதுகள் மூலப்பிரகிருதியிலடங்கியிருந்தும் சஞ்சிதத்தை ஈசன் அந்தந்த சரீரத்திலிருந்து ஒருதாயிடம் பிறந்து சென்மாந்தரத்தில் செய்தபுண்ணியபாவத்துக்குதக்கபடிபோகபோக்கியமனே, மனேவியாதி, திரவியாதி, பூமி புத்திரு

திருப்பதுமில்லாததுமாகிய சுக துக்கத்தை ஈசன் அவரவர் சரீரத்தில் தானுமிருந்து "அவனன்றி யோரணுவுமசையாது என்பதுபோல்" கொடுக்கிருர் இதுமாத்திரந்தான்பிராரத்தம் இந்த செனமத்தில் செய்கிற பாபபுண்ணியம் சென்மாந்தரம் நீங்கி மறு செனமத்தில் தான் அநுபவத்திற்கு எவ்வளோதா அவ்வளவுக்கு செனமம் சொத்தாதிகள் அறியாமையுடைய அஞ்ஞானிக்குவரும்.

சென்மாந்தர வாசனையை விடமுடியவில்லை என்கிருர்கள் பிறந்தவுடன் குழந்தையோ மிருகாதிகளோ பாலைக்குடிப்பதுமாத்திரந்தான் சென்மாந்திரவாசனை.

பிராரத்தம் 12வயதிற்குமேல்தான் பிராரத்தத்தை ஈசன் சீவர்களுக்கு குடும்பாதி இச்சை முதலானதுகளைக் கொடுக்கிருர் 12க்குள் உண்டாகிற சுக துக்கம் தாய் தகப்பனுதியர் செய்த பிராத்தந்தான் தனக்கு 12க்குமேலுள்ளதுதான் தான்அநுபவம் பிடிக்கும் பிராரத்திற்கு சரீரம் வந்தாலும் முக்கியம் தாய்தகப்பனுக்குத்தான் தனக்குபந்தப் பிடியில்லை யெல்லாம் பொதுவாய் பிராரத்தம் என்பது மனக் கவலைதான் பிராத்தம் அதன்றி இல்லை.

சென்மக்கிரமம் ஒவ்வொரு நினைவுகளும் வெவ்வேறு அந்தந்த நினைவில் உண்டான வுலகேதகமும் வெவ்வேறு அந்தந்த நினைவு நீங்கினதும் அந்தந்த உலகதேகமும் அழிந்துவிட்டது முந்தின முந்தின நினைவிலுள்ள வுலகதேக மல்ல அதுபோல் சாக்கிற விருத்தியும், சொற்பன விருத்தியும் வெவ்வேறு அந்தந்த விருத்தியிலுண்டான உலகதேக விவகாரமும் முந்தினமுந்தின உலகதேக விவகாரமல்ல.

சங்கை ஒரு சொற்பனத்திலுள்ள உலக தேகவிவகாரம் மற்றொருசொற்பனத்திலில்லை. ஒருசாக்கிறத்திலுள்ள உலகதேகவிவகாரம் பிந்தின பிந்தின சாக்கிரத்திலிருக்கிறது. நான் பிறந்து 40 வயது அதுபோல், யாவருக்கும்சரீரம் பிறந்தவருஷம் யேறிக்குறைந்திருப்பதாய் நிச்சயம் செய்து சாக்கிறத்தை மாத்திரம் சொல்லிக்கொள்கிறார்கள்.

எந்தெந்த சாக்கிறத்தித்திலோ சொற்சணத்திலோ யாவரும் குழந்தையாய் பிறந்தமுதல் ஒரே சொற்பனத்தில் சாக்கிறத்தில் பிறந்த ஊரேறுதாய் தகப்பனே இறந்தவர்களோபிள்ளை பெண்சாதி உறவினர்யாவும் வேறின்றி ஒன்றிலுள்ளது

போலவேஇருக்கிறது ஒன்றிலொன்று மாறவேஇல்லை அதிலதி லுள்ளவருத்துபோக்குலாபநஷ்டம் ஊருக்கு போக்குவருத்து இறத்தல் பிறத்தல் புசிப்பு விவகாரம் பொருளாதிருப்பு இது கள்தான் சாக்கிரத்திற்கு சாக்கிரம் மாறிமாறுவது போலவே சொற்பனத்திற்கு சொற்பனம் மாறிமாறி வருகிறது பேத மன்று அந்தந்த சொற்பனத்திலுள்ள உலகதேக விவகாரம் வேறுவேறு போலவே அந்தந்த சாக்கிறத்திலுள்ளது வேறு வேறு உலகதேக விவகாரந்தான் ஒன்றிலுள்ளதே சாக்கிறத்தி லும் சொற்பனத்திலும் இல்லை ஒரே மனந்தான் அதிலதில் தோன்றின உலகதேக விவகாரத்தை நீண்டகாலமிருப்பதாய் சத்தியம் சத்தியம் போலவே மாயையினால் பண்ணிக்காட்டும் மனமே மாயை.

பூர்வ பூர்வ விஷயவாசனையாவது மின் மின் காழியிலோ மின்கணத்திலோ நினவிலுண்டான விஷயாதிகள் பிந்தின பிந்தின நினவில் வருகிறது அது வந்தாலும் வேறு வேறாகி றது அந்தந்த விஷயவாசனை யேறிக்கிடந்து வருகிறது அது முந்தினதல்ல அதுபோலவே சாக்கிரத்தில் சொற்பனத்தி லுள்ள உலகதேவிவகாரமும் வேறு வேறுதான் முந்தின முந் தினதே இல்லவேஇல்லை.

ஈசுவராதி சிருஷ்டி உற்பவம் சீவாதிசிருஷ்டி உப்பமை வேறுவேறு காலமல்ல சீவசிருஷ்டி உலாகதிகளை யுண்டாக்கதற் காலமேதோன்றி யுண்டாக்கி பிறகு தூலதேகவுலகம் சாக்கிறத் தில்விளங்கிருந்து சொற்பணதிலழித்து சொற்பனத்தில் சூட் சும உலகதேகம் காட்டிரக்ஷித்து கனவின்றிதூங்கிற சுழுக் தியில் சூட்சும வுலகதேகத்தையுமழித்து பஞ்சப்பிரளய தரி யாதீதசர்வசாக்ஷி சுத்தப்பிரம்மமாயிருக்கிறது ஈசன் காலமும் சீவன் உலகதேக காலமும் வேறுவேறன்று ஒரேகாலந்தான் குமாரகுரு சிதம்பரமும் மணிக்கோவையில் என்றே நீயுளயன் றேயானுளன்.

யுகம் பலசிருஷ்டி—கிறமச்சிருஷ்டி அஷ்டப்பிரமாணம் சட்லிங்கதாற்பரியம் இது விபரம் யுகபற்சிருஷ்டி நான் நினைத் துப்பார்த்தேன்—நான்யென்பது சாக்ஷியேதான் ஆன்மாவாகிய பிரம்மம்—நினவுதான் மனம் அதுவும் சாக்ஷியன்றி மனமில்லை பார்த்தது இந்திரியம் மனமேதான் இந்திரியங்களாகபார்த்தது கேட்டது வாசனையறிந்தது சூடு சில்லுப்பு ருசிகசப்பை 5யும் யறிந்ததுகூட மனமன்றி இந்திரியம் வேறில்லை இந்திரியத்தை யன்றி யுலகதேக விஷயவஸ்த்து வேறில்லை ஒருநினவில் விஷ

யநினவு கிரேதாயுகம் அதுமனைப் அதைவிசாரிக்கிறபுத்தி— திரேதாயுகம் அதை நிச்சயிக்கிற சித்தம் அது துவாபரியுகம் அதை அங்கீகரித்து நான் யென்னதுயென்று யெடுப்பதாகிய அகங்காரம் யிச்சையாகிய கலியுகம் விட்டதும் சாக்ஷி இது நாலுயுகம் வாசிட்ட முதலிய நூல்களில் ஓர்கினவுவிட்டோர் நினவு இடையிலிருப்பது ஆன்மாவாகிய சாக்ஷியென்று சொல்லி இருக்கிறது இது யுகப்பல சிருஷ்டி - சீவப்பிரயத்தினம்

०

கிறமச்சிருஷ்டி ஒவ்வொரு சரீரத்திலும் உள்ளசீவர்கள் யாவும் உலகதேக விஷயத்திலிருப்பது ஈசுரனது சாக்கிரம் இது தூலவுலகசிருஷ்டி கெனவுகாண்பது ஒவ்வொருவரும் பகிரண்ட வுகைபானதினுல் கனவு ஈசுரனதுசூட்சும உலகதேக சிருஷ்டி கனவின்றி தூங்குகிறது சுழுத்தி இதில் பகிரண்டசூட்சும உலகதேக சிருஷ்டியாதி கற்தாக்கள் துரியாதீதத்தில் அழிந்தனர் இது பஞ்சப்பிரளயம் மிஞ்சினது சுத்தப்பிரமம் பிறகு சொற்பன சூட்சும வுலகதேக சிருஷ்டி பிறகு சாக்கிரதூலவுலக தேகசிருஷ்டி தனித்தனிபகுப்பாகிய பகிரண்டவுலகதேகம் இப்படியாக தோன்றி தோன்றி அழி வதுதான் கிறமச்சிருஷ்டி இஃதன்றி வேறன்று வேதாந்தத் திற்கு இது கற்கவேப்படியோ.

அஷ்டப்பிரமாணம் அது மனம் புத்தி இதில் கற்பித
சீவன் 3 ஞானேந்திரியம் 5 ஆக 8ம் தான் பிரமாணம் தற்சா
க்ஷியையறிகிறதற்கு இது ஆன்மசாக்ஷியினிடத்தில் பிரமாண
மாகிறது இதின் விஷயம் பிரமேயம் உலகதேகம் 8ல் அகஇந்
திரியம் மனம் இதின் விஷய உலகம் தேவலோகம் அதுபோ
ன்னுலகம் புறந்திரியம் ஞான இந்திரியம் 5 இதின் விஷய
உலகதேகம் மனிதவுலகம் பூமியாகிய மண்ணுலகம்
இந்தவுலகதேகம் அஷ்டி (எட்டு) பிரமாணத்தால் அறியக்கூ
டியபிரமேயம்—விஷயவுலகதேகம் அப்பிரமேயம் நினைவு நீங்கிய
சாக்ஷிபிரமம் இதுதான் தானேயசாக்ஷியை அறியும்படியான
அஷ்டபிரமாணம் இதுதான் அஷ்டலக்ஷ்மி இது அஷ்
டமா சித்தி திருவிளையாடலில் சீவன் முத்த அதிகார ரிஷிக
ளுக்கு உபதேசித்தது இது தான் யாதனா சரீரம் புரியஷ்டக
சரீரம் மாயாசாலம் இந்திரசாலம் மந்திர சாலம்
இதுதான் யோகிகளுக்கு சிவப்பு முதலாகிய 9சாயசோதி கீழ்
மேல் சோதி சோதியாகிய விஷய கோறணியை காட்டுகிற
மாயை இதில்தான் யோகி பாச்சுக்காட்டுகிறது அறியாமையு
டைய சீவர்களுக்கு மயக்குகிறது 8ம் தான் மூன்றுலகம்
இஃதன்றில்லை.

சட்லிங்க தாற்பரியம் சட் 6 இதில் அகஇந்திரியம் மனம்
ஞானேந்திரியம் 5 - ஆறுந்தான் சாக்கிரத்தில் ஸ்தூலவுலகமாக

வும் சொற்பனத்தில் சூட்சுமஉலகமாகவும் ஆன்மாவாகியசாக்ஷி யினிடத்தில் தோன்றி ஆடும் ஒடுங்கும் தோன்றி ஆடும் ஒடுங்கும் ஈதன்றியும் ஈசுவரசாக்கிரத்திலேயே இந்திரியவிஷயம் சீவசாக்கிர உலகம் இதில் தோன்றி ஆடும் ஒடுங்கும் ஏதோ யோசிப்பது சீவசொற்பனஉலகம் அதில் தோன்றி ஆடும் ஒடுங்கும் பிறகு நினைவு ஒடுங்கினதாய் (ஓய்ந்திருப்பது) சீவசுழுத்தி இதில் ஆன்மசாக்ஷியாகவே இருக்குமிப்படி தோன்றிசாக்ஷியில் ஒடுங்கும் சாக்ஷிதான் தோற்றமொடுக்கமின்றியது இந்த ஆறுந்தான் சாக்ஷியை விளங்கிக்கொள்ளலிங்கம (குறி) யாகஇருக்கிறது இதுதான் சட்லிங்க தாற்பரியம் ஆன்-மாவாகிய சாக்ஷி அரூபவஸ்து அகண்டம் ஒன்றே மனம் (நினைவு) இந்திரியம் ரூபாரூபம் இதின் விஷயம் உலகரூபவஸ்து வேறு காட்டும் ரூபாரூபவஸ்து அரூபசாக்ஷியில் தோன்றும் ஒடுங்கு தோன்றுமொடுங்கும் இதுசட்லிங்க தாற்பரியம்

சிலர் ஆண்களேயோ பெண்களேயே சாதுமூடர் மூர்க்கரிலுமூர்க்கர் யென்று அறியாமையால் சொல்லுகிறார்கள் சத்துவகுணத்தில் சாந்தமுள்ளவர் இராசோகுணத்தில் ஆசை அதிகமுள்ளளர் தமோகுணமும் ரசோகுணமும் சேர்ந்துள்ளவர் துராசையோடு ஈனத்தொழில் திருட்டு பிறட்டுகளுமுள்ளவர்

தமோகுணமுள்ளவர் மூடர் சோம்பேரியென்று சொல்லு கிறார்கள். இவர்கள் பூர்வ பூர்வ ஜென்மாந்திரத்திலுள்ள வாசனை மூலப்பிரகிருதியிலடங்கியிருந்து ஒருவர் கற்பத்தில் பிள்ளையாகப்பிறந்து, பிறகு பூர்வபூர்வ ஜென்மவாசனை தடித் திருப்பதைத்தான் சொல்லுகிறார். அது நாலுபேருக்கும் சகசம் சுபாவம். அதை நீக்கவாவது முடியாது; ஞானி முத் துரிய துரியாதீதஞ் சென்று உபசாந்தமுள்ள சீவன் முக்தர் களாயிருந்தாலும் அவர்களையும் பிரகிருதி வாசனை விடாது. திருட்டுப் பிறட்டுள்ள இச்சைகள் யதார்த்தமாய் உள்ளி விராது. அதை பிறர் குற்றமோ குணமோ சொல்லுவது சொல்லுகிறவர்கள் மூடர்களே. துர்வாசர் விஸ்வாமித்திர ருக்கு இதுபோலவே மேற்சொன்னவர்களில் சாந்தமுள்ளவர் களைச் சாந்தமுள்ளவரென்று சொன்னால் ஜென்மாந்திரத்தி லோ பூர்வபூர்வ ஜென்மத்திலோ முத்துரிய துரியாதீதத்தில் சென்றிருந்தவர்களல்லவே அறியாமையுடைய மூடர் முட் டாள். உலக விஷயத்தில் உணர்ச்சி ஞான சாந்தமுள்ளவர் அவர்களை ஞானி ஞானத்திற்கு அதிகாரிகளென்று சொல்லிக் கொண்டும் தற்சாக்ஷியை அறிந்த சீவன் முக்த ஞானியை மூடர் மூர்க்கரென் றெண்ணியும் தற்சாக்ஷியை விளங்கிக் கொள்ளாத பாஷாண்ட வேஷமுள்ளவர்களை இவர்கள் உண் மையுள்ளவர் உண்மைப்படி நடக்கிறார்கள், செய் காரியம் சற் கருமம் என்றும் பாஷாண்ட வேஷதாரிகளை சொல்லிக்கொள் ளுகிறவர்கள் உண்மையாகுமா. அறியாமையால் சொல்லு கிறார். அவர்களைக் குற்றங்கொள்ளுவது சரியல்ல. இதைக் கிரமமல்லவென்று வேதப் பிரமாணப்படி காட்டி கண்டித்து

விட்டு சொல்வது சரியாகும். அல்லாமல் சொல்லுகிறவர்கள் மூடரிலும் மூடராம். அவர்களும் அறியாமையே பாபம்."

அன்னபக்ஷி, மனிதஜீவன், உலக விஷயத்தில் இச்சையோடு பறப்பது, சரீரமாகிய குடத்தில் நினைப்பு என்கிற தண்ணீர் விஷய இச்சையாகிய பாலை விஷயத்தில் சத்துவ குண சுகத்திலுள்ளதை அது அருள்பால் அதை கிரகித்து ரசோ தமோகுண போலி பிரயோசனமற்ற நினைவாகிய தண்ணீரை விட்டுவிடுகிறது. பிறகு சமாதி சுழுத்தியில் துரிய தேவகங்கையில் சுக அருளில் சீவன் பூரண சுகம் புசித்து, பிறகு நினைவாகிய மன ஆகாயம் இந்திரிய பூதாகாசத்தில் பறந்து சரீர குடத்தில் சத்துவகுண பாலைக் குடித்து சஞ்சரிக்கும். சீவன்முக்தனாகிய அன்னப்பக்ஷி.

அகஸ்தியர் அகர், சாக்ஷி, தீ, ஞானம், ஞானமென்பது அருள், அருளில் ஒடுங்கவும், பிறகு மனம் இந்திரிய விஷயத்தில் வந்து விவகாரஞ் செய்து, பொதியமலை மனம் இந்திரியாதி யாவும் ஒடுங்குமலை துரியமலையில் ஒடுங்கும். துரியமலையில் வசிப்பவர்கள் சீவன்முக்தனாகிய அகஸ்தியர், துரிய அனுபவியான ரிஷிகள், மான்தோல் புலித்தோல் உருத்திராக்கம் விபூதி தரித்திருப்பர், மான் மன இந்திரிய விஷயங் காட்டி விஷயாதிகளில் தாவி (பாய்ந்து) செல்லுகிற சீவவிருத்தி இச்சையாகிய மானை மனதை விஷயம் மித்தை சத்தியமல்லவென்று பந்தப்படாமல் சரீர காரியத்திற்கு மட்டும் கிரமப்படி செலுத்தி பிள்ளை பெண்சாதிக்கு வேணுமென்கிற இச்சையை நீக்கியிருப்பது இச்சை நீங்கிய மனதோடு உலக

விஷயத்தில் சீவனிருப்பது மான்தோலி லிருப்பது சாக்ஷியில் சீவமன விருத்தி மாயை விருத்தியை ஒடுக்கிருந்து, பிறகு விருத்தி வந்து மனமென்கிற மானை விஷயம் இத்தைபொய் உலகு யாவும் அருளாய் விளங்குகிறதென் றிருப்பது மான்தோலிலிருப்பது.

இதுபோலவே மனதோடு சீவன் உலக விஷயம் சத்தியமென்று இச்சைப்பட்டு கோரக்கொடுமையோடு பாய்கிற சீவ அகங்காரப் புலியை மானைப்போல் உலக விஷய மித்தையென் றிருப்பதுதான் புலித்தோலிலிருப்பது.

உருத்திராக்கம், உருத்திரன் சர்வசம்மாரன் மிஞ்சினது துரிய சாக்ஷி. அது அக்கம் என்பது கண்காக்ஷி. விஷயம் சீவன் மனவிருத்தி அகண்டாகார மாயை விருத்தி நீங்கியிருந்து உலகு யாவும் தன் சாக்ஷி விருத்தியாகிய அருளாய் விளங்குகிறதை தரித்திருப்பதுதான் உத்திராக்கம் தரிப்பது.

விபூதி, உல்கவிஷயம் யாவும் பசுவாகிய சீவமலம், ஆணவம், காமியம், மாயை இதன் விஷயமாகிய உலகை ஜீவன் தரித்தரிப்பது சீவ விருத்தியை சீவதுரியம் பாதுரியம் சிவதுரியம் சென்று என்பது மனமற்றுப் பிறகு மாயையுமற்று பிறகு அருளும் ஒடுங்கி துரியாதீதமாய் இருந்துப் பிறகு விருத்தியாகிய நினைவு வந்து உலகு அருள்மயமாய் விளங்கிய தான அநுபூதியைத்தான் பூதி தரிப்பது.

சன்னியாசி பிராமணன், துரியசாக்ஷியே நான்வேறன்று சர்வமும் என் சத்தியின் விளக்கம். நான் சர்வசாக்ஷி சுத்தப் பிர்ம்ம ரூபமன்றிருப்பதுதான் சன்யாசி. சுத்தப் பிராமணன் அதற்குத்தான் ஒரு பற்றின்றியது. இது வாசிட்டம் சிகிடன் வேதாளம் முதலிய கதையிலிருக்கிறது. அதினால் துரியாதீத சாட்சியே சன்னியாசி சுத்த பிராமணன். நினைவாகிய மனமேதான் க்ஷத்திரியன். மனம் 5 இந்திரிய விஷயத்தில் யுத்தம் பற்றின்றி நான் சாட்சி என்ற கிரமத்தில் பரவுபகாரமாகச் செலுத்துவது பரவுபகாரம், சரீரத்தில் இரானின்ற பிரமா விஷ்ணு உருத்திரர் மூவர் மூலப்பிரகிருதியிலிரானின்ற சிவன் நியதிப்படி மனதோடு உள்ள சீவனுக்கு நடக்கிறார். நாம் சாட்சியென்ற அநுபவ சீவன் முக்தன் கிரம யுத்த க்ஷத்திரியன்.

வைசியன் இந்திரியம் ஐந்துமேதான் ஐந்து விஷயமும் பற்பலவாகயிருந்தாலும் பற்றின்றி கிரமத்தில் பிர்ம்ம சத்திகள் முழுக்கும் உலகம் யாவுமன்று இந்திரியத்திலும்தான் சாட்சியென்ற கிரமத்தில் நிறுத்துவது சீவன் முக்தனாகிய ஞானவசியன்,

சூத்திரன், இந்திரிய விஷய சரீரமே சூத்திரன். அது இந்திரியம் ஒரு பொருளாகயிருக்கிறது. இதின் விஷய உலக தேகம் மகா சூத்திரம் முழுமித்தை சரீரத்தையே எப்போதும் ஐயமின்றி தானென்றிருப்பதுதான் சூத்திரன். மூடன் முட்டாளென்று பெயர். மேலுள்ள மூவருக்கும்

கருமேந்திரியம் 5ம் சரீராதி தொழிலைச் செய்வது சூத்திரன் கருமம். மூவரும் மனம் இந்திரியம் சீவன் சாட்சி நானென்ற விவேக பிராமணனுக்கு அடிமைப்பட்டவரென்று பொது வாய் சொல்வது சரீரத்தை பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத் திரரென்று சொல்லுகிறவர்கள் அறியாமையே. சரீரமோ மாமிச நரம்பு எலும்பு மலம் மூத்திரம் நிறம்பி உள்ளே கிடக் கிற சரீரம். அதை பிராமணர் முதலாக உயர்வு தாழ்வாய் சொல்லுவது மாமிசத்தையும் மலம் மூத்திரங்களையும் ஐய மின்றி புசித்தவர்களேயாகும். மலம் மூத்திரமானது மாமிச நரம்பு எலும்புகளாகிய சரீரத்துக்குள் கிடப்பதால் அதை நானென்றால் அதைப் புசித்த மூடன் முட்டாளென்றேயாகி றது சரீரத்தை நான் உயர்வுயென்று நிச்சய புத்தியோடு சொல்லக்கூடாது. யாவரைப்போல நானொரு மனிதனென் றே சொல்லவேண்டும். தொழில் முறையிலும் அதிகாரத் தத்துவத்திலும் உயர்வு தாழ்வு உலக காரியத்தின்பொருட்டு செலுத்த மற்றதிலில்லை. குறளில் நாயனார் விதியுமிது.

சீவன் முக்தனாகிய பிராமணன் அருளாகிய விபூதியை யணிந்து சாட்சி நான் என்ற உருத்திராக்கத்தைத் தரித்து சமித்து உலக விஷய மித்தையென்ற விஷயக் குச்சியும் நினைவு அருள் விருத்தி நெய்யையும் துரிய விருத்தி நான் சாட்சியென்ற ஞானக்கினி நெருப்பையும் இந்திரிய பொறி யையும் இந்திரிய விஷய நவ (9) தானியத்தையும் துரியாதீத அகண்ட குண்டத்தில் ஆகுதி (யாவும் நினைவோடொடுங் கியது) செய்து பிறகு உலக யாவும் அருளாய் விளங்கிய விபூ

தியைத் தரித்து புசிப்பது சொரூப ஆனந்தத்தை சீவனடைவது சீவன் முத்தனுகிய பிராமணன் இந்திரியம் 5ம் மனமும் சாட்சியில் ஒடுங்கி ஒடுங்கி வருவதுதான் சீவன் முக்த பிராமணனுக்கு க்ஷத்திரிய வைசியன் காத்தல். துரியவிருத்தி இந்திரிய மன நினைவுக்கு துரிய விவேக பிராமணன் ஓதல் ஓதிவைத்தல் தொழிலெனவும் யாகமென்பது இந்திரிய மலத்தை சாட்சி அகண்டகுண்டத்தில் நான் பிர்மம சொரூபமென்று ஓமம் பிரதிதினமும் வாசிட்டம் வேதாளக் கதையில் விருத்தி நீக்குந்தோறும் நான் சாட்சிசொரூபம் என்னிடத்தில் நினைவு முதல் உலகு யாவும் தோன்றி யொடுங்குகிறதென்ற விவேகஞ் செய்தல், யாகம் இப்படியுள்ள சீவன் முக்த பிராமணனுக்குச் சன்னியாசி மனமிந்திரியம் சாட்சியில் அடங்கினபோது சன்னியாசி உ-ம் நினைவுவந்தால் சந்யாசமில்லை. காயாசம் கட்டவில்லை. அதனுல் க்ஷத்திரியர் வைசியர்களுக்கும் சந்யாசமில்லை என்று வாசிட்டம் முடிய நூல் கருத்து.

அதை இப்போது க்ஷத்திரிய வைசியர் காவித்துணி தரிக்கலாம், சூத்திரன் மூடன் தரிக்கலாகாதென்றே எழுதி வைத்திருக்கிறுர்கள். அது இந்திரியம் மனம் இரண்டும் சாட்சியில் தோன்றித் தோன்றி ஒடுங்கும். நினைவு ஒடுங்குந்தோறும் காவி சன்னியாச விருத்தி நினைவு மறந்துமறந்து போகும். அப்போது நினைவோடு கூடிய சீவனுக்கு காவித்துணி நிலைக்காது.

மனமேதான் இந்திரியம், இந்திரிய விஷயம் சரீரவுலகம், அது விவர்த்தம், சரீரமாகிய சூத்திரனுக்கு சன்னியாச

மில்லை, க்ஷத்திரிய வைசியனுக்குண்டென்று சொல்லுகிறார்கள். வாசிட்டத்தி லுண்மையன்று என விளங்குகிறது, துணியைத் தரிப்பது காசாசமென்று நடந்துக்கொண்டவருக்கு அவர் கருத்தை நாங்களிப்போது தடுக்கவில்லை. அவரின் பழக்கப்படி நடக்கட்டும். அவர்களுக்கும் மரியாதைச் செய்கிறோம். அவர் செய்காரியத்திற்கின்று நன்மை தீமையோ யாவுவல்லனறிவன்.

மனதையன்றி இந்திரியமில்லை. மனமேதான் இந்திரியங்களாக வேறாக விளங்குகிறது. மனவிருத்தியே சாட்சியினிடத்தில் தோன்றிவந்தது. இந்திரிய மனதை சாட்சியில் சீவப் பிரயத்தனத்தினால் குருவினிடம் அநுபவம் விளங்கிக்கொண்டவர்கள் ஒடுக்கியிருக்கலாம். துரிய அனுபவ குருவினிடம் அனுபவம் விளங்கிக்கொள்ளாதவர்களுக்கு ஈசஞனவர் தான் சுயமாய் சீவப் பிரயத்தனமின்றி யாவும் தான் ஆனதினால் தன் கிருபையினால் இரவிலோ பகலிலோ கனவின்றி தூங்குகிற சுழுத்தியில் மனம் மாயை இரண்டு விருத்தியும் தானும் ஒடுங்கி சாட்சி மாத்திரமாய் அகண்ட அறிவு வெளியாயிருக்கும். அப்போது சீவன் உலகிலில்லை. பிறகு நினைவு வந்து உலக யாவுமாய் விழித்தபிறகு தோன்றி விளங்கும். க்ஷத்திரிய வைசியர்களை பிராமணரோடு சேர்த்தது கருமேந்திரிய விஷயமேதான். சரீரம் சரீரமோ விவர்த்தம் சூத்திரன் ஒன்றுமறியாத மூடன். விருத்தியின்றி சரீரமட்டும் ஒரு காரியத்திற்கும் பிரயோசனமாகாது. சன்னியாசம் பிராமணத்துவத்திற்குத் தள்ளுபடி என்று ஆன்ம சாஸ்திரக் கருத்து.

துவிதம் விசிட்டாத்வைதம் அத்வைதம் 3, துவிதம்
சாட்சிக்கு வேறானமாயை, அருளும் சிவமும் ஒன்றே, அரு
ளின்றி சிவமில்லை, சிவத்தையின்றி அருளில்லை, அருளி
லிருந்தே வந்த மாயை அருளுக்கு வேறாய் உலகாய்த் தோன்
றுவதினால் துவிதம் சாட்சிக்து வேறாய்த் தோன்றுவது
சர்வ அண்ட. உலகு மாயையோடு உள்ள ஈசன் பிரமாதியர்
கள் சிருஷ்டி ஒருபோதும் நிற்கிறதில்லை சாக்கிர சொப்ப
னந்தோறும் சிருஷ்டியாகித் தொன்றித்தோன்றி ஒடுங்கும்.
பகிரண்டவுலகு மனிதாதி சீவ சரீரத்தில் முத்துரிய துரியா
தீதம் நிலைத்தவர்களுக்கு ஈசுராதி பகிரண்டவுலக சிருஷ்டி
சர்வ சம்மாரமாக நீங்கும். சர்வ பகிரண்ட வுலகு சேர்ந்தது
சர்வ அண்ட வுலகு, அது ஒருபோதும் நீங்காதிருக்கும்,
சர்வ பகிரண்டஞ் சேர்ந்த சர்வ அண்டவுலகு சர்வ சம்மாரம்
ஒருபோதும் ஆகாது. சர்வேசன் சிருஷ்டிக்கு ஓய்வே
இல்லை என்பது விவேகானந்தரும் முடிவு, ஈசன் பிரளயம்
பகுப்பு பகிரண்ட சம்மாரம் அதானது ஒரு ஒரு சீவ சரீர
மாகிய சீவர்கள் கனவின்றி தூங்குகிறது இதுதான் ஈசன்
பிரளயப், இதினால்தான் மத்வாச்சாரியர் துவித சித்தாந்தம்
உண்மையாய் நிலைத்தது, இதனால் அண்ட பகிரண்டமும்
என்றார். துவித நிச்சயத்தால் தாயுமானவர் பகிரண்டவுலகம்
துரியாதீத ஞானிக்கு முடிவாக மீண்டும் வராமலொடுங்கும்.
அநுபவ ஞானமில்லாதவர்களுக்கு பகிரண்ட வுலக ஜென்ம
மாகிய பிறப்பு பிறந்துபிறந்தே வரும். சர்வ பகிரண்டவுலகு
ஒருபோதுமழியாது. சீவன் முக்த ஞானிக்குத்தான் பகி
ரண்ட வுலகம் அழிந்துபோகும் சென்மம் வராது. இதைத்

தான் ஈசுருதி சிருஷ்டி ஒருபோது ஒழிந்து பிரளயமாகு மென்று சொல்லுகிருர்கள் வுலகில். ஒரே வஸ்துவாகிய சர்வ சாக்ஷி சொரூபம் எப்போதுமிருக்கும் அது ஒருபோதும் சிருஷ்டியாகி வருகிறதில்லை அதனிடத்தில் வுலகு பகிரண்ட வுலகு உலகாய் தோன்றித்தோன்றி மறையும்.

விசிட்டாத்வைதர், வுலகு சாக்ஷிக்குவேருய் தோன்றி ஞலும் ஒன்றே யென்பதுவும் அருளே மாயையாகவும் மீண்டு அருளாய் விளங்குவதிஞலும் இராமாநுஜர் இதனுல்தான் விசிட்டாத்வைத சித்தாந்தம்.

அத்வைதம் சர்வசாக்ஷி ஒன்றன்றி வேறன்று சாக்ஷி சொரூப வஸ்த்து அருள்தான் அருளாகிய விவேக விருத்தி யும் ஒடுங்கினது துரியாதீதம் அது எப்போதும் ஒடுங்கி ஒடுங்கி வந்தாலும் அந்த அருளாகிய விவேக விருத்தி வந்த போதும் ஒன்றேதான் வேறன்று சர்வ சாக்ஷியாகிய சுத்தப் பிரமம்தான் என்றுமுள்ளதென்று சங்கரர் சிந்தாந்தம் மூவர் சித்தாந்த விவேசமும் சரியே.

௩. தேவயிந்திரன்.

௪. சீவன்முத்தஞானி.

சப்தகன்னி சப்தரிஷி.

துரிய சாக்ஷியினிடம் தோன்றிவருகின்ற விருத்தியாகிய மனதில் சாக்ஷியதார்த்த இரசோகுண விருத்தி (1) சாக்ஷியதார்த்தமோ குணவிருத்தி (2) காதினிடம் உண்டான சாக்ஷி யதார்த்த சுரோத்திர விருத்தி (3) தோல் இடங்கள் தோரும் உண்டான சாக்ஷி பரிச விருத்தி (4) நேத்திரத்திலுண்டான சாக்ஷி யதார்த்த ரூப விருத்தி (5) நாவினிடத்திலுண்டான சாக்ஷி யதார்த்த ரச விருத்தி (6) மூக்கினிடத்திலுண்டான சாக்ஷி யதார்த்த கந்த விருத்தி (6) சப்தகன்னி.

இந்த விருத்திகளில் சாக்ஷியினுண்டான யதார்த்த அகங்காரம் மனதில் ரசோகுண அபிமான விவேகபுத்தி (வேதவியாசர்) (1) சாக்ஷியிலுண்டான மனதில் விவேகத்தோடு தமோகுண யதார்த்த அகங்கார அபிமான மூற்கபுத்தி விஸ்வாமித்திரர் (1) சாக்ஷியிலுண்டான மனசுரோத்திரவிருத்தி யதார்த்த சத்துவ அபிமான புத்தி சநகாநந்தர் (3) சாக்ஷியிலுண்டான மன பரிசவிருத்தி யதார்த்த சத்துவ அபிமான புத்தி பராசர் (4) சாக்ஷியிலுண்டான மன நேத்திர இந்திரிய விருத்தி யதார்த்த சத்து அபிமான புத்தி கண்ணுவர் (5) சாக்ஷியிலுண்டான மனவாக்கு இந்திரிய (நல) சுரரசதொனியுடன் யதார்த்த சத்துவ அபிமான புத்தி நாரதர் (6) சாக்ஷியிலுண்டான மனவாக்கு இந்திரிய விருத்தி யதார்த்த ஞான சத்துவ அபிமான புத்தி [illegible] (7) சாக்ஷியிலுண்டான

மனம் பிராண மூக்கு கந்த இந்திரிய யதார்த்த விவேக தருமா விசேஷ மிக்க திட அபிமான புத்தி துர்வாசா (8) சாக்ஷிபி லுண்டான மன யதார்த்த சத்துவ இபற்கை விவேக அபி மான புத்தி அகத்தியர் (9) மேலுள்ள (7) கன்னிகளும் உலக தேக விஷபம் பல பிரயோசனமற்றது மாயை பொய் சாக்ஷி யென்றுமுள்ளதென்று நிச்சய விருத்தியாகிய சப்த கன்னி களும் பல ஆக்கு பல்லாக்கு ஆக ஒத்துயாவும் சாக்ஷியென விஷயம் நீக்கி கட்டி இருக்க மேலுள்ள (பு) ரிஷிகளும் பல் லாக்கில் நேத்திர இந்திரிய சாக்ஷி சத்துவ மனசேற்கை விருத்தி அபிமானியாகிய தேவேந்திரனை யேற்றி சத்தமுதலிய ரிஷி களும் தங்கள் தோள்போட்டு விஷய ரசோதமோகுண விருத்தியை போட்டுவிட்டு சாக்ஷி சத்துவகுண விருத்தியை தூக்கிக்கொண்டு காதாகிய சத்த விஷயம் பற்பல வீதிகளி லும் தோல் பரிச விஷயம் பற்பல வீதிகளிலும் நேத்திர ரூப விஷப பற்பல வீதிகளிலும் நாவில் ரசவிஷய பற்பல வீதிகளி லும் மூக்கு கந்தவிஷய பற்பல வீதிகளிலுல் இது புறநகர் பஞ்சேந்திரிய விஷயம் சரீரம் புறநகர் வெளியில் செய்கிற விருத்தி இனி இந்தின்னி 5 இந்திரிபத்துக்கும் ஆணியாய் இந்திய விருத்தி அழிந்தாலும் மன நினைவு உள்ளிருப்பதால் ஆணி உள்கோட்டை மனக்கோட்டை வீதி மனரசோகுண விருத்தி இந்திராணி அரமனை மதிலில் உள்ள மன இரசோ குண பற்பல வீதிகளிலும் மன தமோகுண பற்பல வீதிகளி

னும் தூக்கி பட்டணப் பிரகாரத்தோடு 10 தச இந்திரியம் மேள்வாத்தியமுழக்க பிராணுதி 10 தச வாயு யாழ் தம்பிரு பிடில் வேயங்குழல்கள் கூடிய 32 வாத்தியத்துடன் சாக்ஷி நான் யென்ற அகஸ்தியர்முன் தோளோடு மனம் யதார்த்த சத்துவ விருத்தி இயற்கை இந்திருாணியிடத்தில் விடவும் தேவேந்திரன் இந்திருணியோடுகூடி சாக்ஷி அருளாயமர்ந்து சுகித்து பிறகு மனவிருத்தியோடு தேவலோக ஞானேந்திரியம் கருமேந்திரியம் யாவும்கூடிய தேவசபைக்கு சப்த கன்னியும் அரம்பை ஊர்வசி திலோர்த்தமை மேனகை இவர் மனம் புத்தி சித்தம் அகங்காரம் சத்திகள் நடனம்செய்ய சத்தமுக லிய மகரிஷிகளும் கூடிய தேவ சபையில் தேவேந்திரன்வந்து சிம்மாசனத்தில் நான் சாக்ஷியென்ற சிம்மானத்தில் இவர் களோடு தேவலோக பூவுலகநீதி விசாரித்து உலகம் யாவும் துரியாதீத சாக்ஷி பிம்ப சத்திகள்தான் மூவுலக மனம் பிரம் மாவுலகம் இந்திரியம் தேவவுலகம் இந்திய விஷயம் மனித பூவுலகம் மன இந்திய விஷயம் 3) மும் மாயை பிரகாசம் பிரம்மா சிருஷ்டி பிரகாசம் தானேவிளங்குகிறது நாம் துரியா தீத சாக்ஷி நம்மிடத்தில்தான் விளங்குகிறதென்ற சக்தி நீதிப் படி முத்துரிய துரியாதீத அநுபவிகளை அவரவர் சரீரத்தில் ரக்ஷித்து அநுபவமில்லாத வுலக சத்தியநினவுள்ளவர்களை சிட்சித்து பிரதிதினமும் இந்நீதிப்படி தேவ அரசு செலுத்தி சபை கலைந்து இந்திருணியிடம் ரிஷிகள் வேண்டாமல் தானே

போய் சுகித்து பிறகும் தேவ அரசுசெய்து வருகிறார் மனித மனித சரீரங்கள்தோரும் சிட்சை ரக்ஷிப்போடு பிரதிதினமும் நடக்கிறது.

இந்திராணி என்பவள் அருள்சத்தி அவள் சிவத்தோடி ருப்பவள் அக்கினியும் பிரகாசமும் வேறில்லாதுபோல அருள் சத்தி இடத்தில் விவர்த்தமாய் மாயை மனம் இந்திரியம் இதின் விஷய தேகவுலகம் இருக்கிறது. அதிலதில் அகங்கார அபிமானி இருக்கின்றன அதற்கெல்லாம் நேத்திர இந்திரிய அபிமானிதான் சர்வ ஒவ்வொரு மனிதி மனித சரீரத்தில் தேவேந்திரன்தான் தலைமையாய் இருக்கின்றது அதில் விளங் கிய அருள்சத்தி இன்றி இந்திரனுக்குச்செயலில்லை யாவைக்கு மில்லை இந்திரன் யாவும் மனஇந்திரிய விஷயம் விருத்தி ஒடுங் கினல் இந்ராணி இடம் துரியத்தில்கலந்து துரியாதீதமாய் சுகித்து இருப்பான் மனிதிமனிதர் சரீரத்தில் பிரதிதினமும் துரியம் துரியாதீதம்வரை ஒடுங்குகிறது யார் இதை அறிந்து அநுபவத்திலிருந்து செனனமரண நீங்கவேணுமென்ற தீவிர இச்சையுள்ளவர்கள் பத்து நிமிஷத்தில் தெரிந்து மோட்ச அநுபவம் நிலைக்கும் தெரிந்து அநுபவம் வேணுமென்ற தீவிரமுள்ளவர்கள் நேரில் தெரிந்துக்கொள்ளலாம் செய் கிறோம்.

இலக்கணம் ஞானேந்திரியம் 5ம்தான் பஞ்சஇலக்கணம்

ஆப்பு அணி ஆப்புமனம் அது மாயைதான் அதானது பஞ்ச இலக்கணத்தைத் இந்திரியத்தைத் பஞ்ச இந்திரிய விஷயமானது அணி அதானது சத்த விஷயம் நாணு பலபல பரிசவிஷயம் நாணு பலபல ரூபவிஷயம் நாணு பலால ரசவிஷயம் நாணு பல பல கந்தவிஷயம் நாணு பலபல இது 5-விஷயம்தான் ஆப்பு அணியாய் இருக்கிறது° மன மாயைதான் தொல்காப்பியம் அருள்சத்தி இன்றி சில மில்லை பழமையாக மாயை மனம் நீங்கி நீங்கி தோன்றினாலும் அருள் நீங்காமல் அக்கினியும் சூடும்போல் காத்திருப்பதால் தோல் பழமை அருள் அகனுல் தொல்காப்பியம் பிறகு அருளும் ஒடுங்கி துரியாதீதப்பட்டு பிறகு அருள் மாயை மனம் இந்திரியம் விஷயவுலகம் இதுகள் தோன்றி தோன்றி ஒடுங்குகிறது சாக்கிறத்திற்கு சாக்கிற சொற்பனத்திற்கு சொற்பனம் உலகதேகாதிகள்யாவும் புதிது புதிதாய் தோன்றி ஒடுங்குகிறது அது புதிது புதிதாய் தோன்றி தோன்றி அழிந்து விடுகிறது அருள் ஒருபோதும் அழியாமல் யிருப்பதால் தொல்காப்பியம் தன் அருளாகிய சாக்ஷியறிந்து கொள்ள மனம் ஆப்பாய் இந்திரியம் அணியாய் பஞ்ச லக்ஷணத்தோடு விஷய மித்தை சாக்ஷி சத்தியமென்றறிந்து கொள்ளவேயதுவென்று எனது விசாரதுணிபு ஈதன்றி தன்னையறிய வேறாய் இலக்கணம் விளங்கவில்லை.

கரும பத்தி சர்வ மனிதி மனித சரீரமும் ஒரு ஒரு பகிரண்டம் சர்வர்களது சரீரத்திலும் மூலாதாரமுதல் ஆறு

ஆதாரமும் மூலாதாரக் கணபதி முதல் ஆறு மூர்த்திகளும் உள்ளன ஒரு ஒரு சரீரமும் தேருகவும் பத்து இந்திரியம் குதிரையாகவும் இந்திரியக்குதிரைகள் தனது தனது நாலு வித விஷயத்தில் இழுத்துச்செல்லும் அதற்கு மனம் கடிவாளம் புத்தி அடித்து ஒட்டும் சவுக்கு ஒட்டக்கூடியவர் கடவுளாகிய கிருஷ்ண பகவான் யாவர் மதம் உள்ள கடவுள் ஒன்றே அதுவெறும்வெளி அறிவுவெளி அது அனந்தஞ் சத்தியோடுள்ளது உலகதேகம் அந்த வெளியில் தோன்றி தோன்றி ஒடுங்கி இருக்கும் இந்த பிரம்மம் என்றுமுள்ளது அதன் சக்தி உபாதியாகவும், உபாதியில் வளைபட்ட சாக்ஷி வெளியை ஈசனுகவும் கொள்கிறது அந்த சத்திதான் உலக தேகாதிகளாகயும் சர்வ தொழில்களுஞ் செய்து முடிக்கிறது மனிதி மனிதர்கள் நினைத்தபோதெல்லாம் மலசலம் கொட்டாவி விக்கல் தும்மல் இதுகள் தானே செய்துகொள்ளமுடியாது அதுகள் யாவும் ஈசன் சத்தி நடத்துகிறது ஒரே துரியாதீத பிரமமயென்றுமுள்ளது யென்ற உணர்ச்சிதான் ஞானம் அதன் சத்தியென்ற நினவு பத்தி அந்தசத்திதான் உலகாய் நடத்துகிறதென்ற நினவுதான் சர்வ கருமம்செய்து முடித்தது ஈதன்றி வேருய் சொல்வதெல்லாம் அறியாமை யுடையவர்களுக்கு குழந்தைக்கு பிருக்குகளாக காட்டுவதுபோல பிராக்குகாட்டுகிறுர்கள் அறியாமையால் இப்படியுள்ளதுதான் பந்தமற்ற ஈசன் கருமம் பத்தி ஞானம்

திரிலோகத்திலறிதொரு ஞானி மன[illegible] பிரமா
இந்திரியம் தேவவுலகம் இந்திரிய பஞ்ச விஷபம் ம
கம் இதுகளால் அறிபப்படாமலும் இதுகள் தோன்
குவதற்கிடமாயுள்ள துரியவஸ்து ஒன்றேதான்
சிவன் முத்தர்களான யாவரும் துரியாதீதத்தில் சென்
ஒன்றான அறிதான அறுதானவர் ஒருவர்களே யல்ல
சாக்ஷியல்ல ஒன்றேயென்று முள்ளது.

சர்வம் சிவப்பிரகாசனருள்.

முற்றிற்று.

# அறிவிப்பு.

மனிதி மனிதாவர்கள் சரீரத்திலும் மாயையோடு ஈசனிரு
சிருஷ்டிக்க மனவிருத்தியோடுகூடிய சீவன் திருகியப்பட்ட யா
ரும் அபிமானித்து இன்னார் புத்திரனென்று அபிமானதோற்
முள்ள சரீரவுற்பவம் திருச்சி ஜில்லா ஜயங்கொண்டம் தாலூக்
மேலணிக்குழி குடிக்காடு கௌமார சைவமதம் அ. சி. வைத்
லிங்க சுவாமி புரிந்து 29 ஆண்டு கிரஹவாசம் கோயிலூர் ஆதீன
சிக்கல் புறவாச்சேரி மடாலயம் மெய்யப்பசுவாமி அவர்கள் பிரத
சிஷியனாக துறவுவாசம் 1 ஆண்டு பூண்டு சிதம்பரமடாலய வாச
15 ஆண்டு சேவித்து தஞ்சை, பாபநாசம் தாலூகா இனாம்யேரியி
8 ஆண்டாக ஆத்மசாஸ்திர விசாரபாடம் துவக்கின்றி நடத்திவந்
தனக்கு ஈசனருளால் அநுபவ ஆத்மஞான விளக்க நூல் 1. மு
செய்து வெளியிட்டு ஆத்மஞான சத்தாவஸ்தை அநுபவம்
ஆத்மஞான சம்பந்தர் 1. இவ்விரண்டும் சேர்ந்து ஒரு புஸ்தகமா
செய்து முன் நூலும் இதுவும் இரண்டிற்கும் வேதாந்த சித்தாந்
மடாலய அறிவாளிகள் ஞான உற்பத்திற்கு உலறவிடமாக இரு
கிறது இல்லாவிட்டால் சாஸ்திர ஞானத்திற்கும் ஷை சாஸ்தி
யுரைக்கும் திருத்தவுரை இல்லாமல் போய்விடுமென்றுதியாகிறத
இப்பொழுதும் நாடுகளில் வேதாந்த புராண சரிதை சங்கமிருந்தா
நன்மை பயக்குமென்பதெனது சித்தாந்தம்.

ஷை புத்தகங்கள் எமதிடம் பெற்றுக்கொண்டால் இலவசமா
கிடைக்கும். இப்புத்தகங்கள் வேண்டுவோர் கீழ்காணும் விலா
தாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ந. பஞ்சாபகேஸ உடையார்,
வண்டுவோஞ்சேரி. திருச்சேறை P. O.
(வழி) கும்பகோணம்.